விலை சதம் 50 ★ ★ பக்கங்கள்—10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவிட்ஸ், றிக்கோ பீடா வகைகளுக்கும்
றிக்கோஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 464

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR

ஆரோக்கியமான வாழ்விற்கு ... சோப் ... உபயோகியுங்கள். ... விற்பனைக்கு ... தயாரிப்பு

மலர் 19 வைகாசி 9 ஜ: ஆகிர் 3 ஞாயிற்றுக்கிழமை [22—5—77] இதழ் 100

# கூட்டணியில் புதிய பேரணி

# காங்கிரஸில் வாலிப முன்னணி!

## தமிழ் ஈழத்துக்கு போட்டி; சுந்தரரும் ஒரு கூட்டணி!

(நமது அரசியல் நிருபர்)

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் தினம் நெருங்கிவந்துகொண்டிருக்கிறது. இதேசமயம் புதிய கட்சிகளும் புதிய கூட்டு [illegible] டிருக்கின்றனர்.

### தமிழர் விடுதலைப்பேரணி

தமிழர் விடுதலைக் கூட்டணி சில தொகுதிகளில் நியமித்துள்ள வேட்பாளர்களினால் அந்தந்தத் தொகுதிகளைக் கூட்டணி இழந்துவிடவேண்டி நேரிடுமென்பதால் கூட்டணியைக் காப்பாற்றும் பொருட்டு 'தமிழர் விடுதலைப் பேரணி' என்ற பெயரில் கூட்டணியைச் சேர்ந்த தீவிரவாதிகள் சிலர் அந்தந்தத் தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தவிருக்கின்றனர்.

### கூட்டணியைப் பாதுகாக்க...

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பொத்துவில், பட்டிடிப்பு, திருக்கோணமலை ஆகிய தொகுதிகளில் தமிழர் விடுதலைப் பேரணி போட்டியிடுமென்றும் இந்தப் பேரணி கூட்டணியைப் பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்குமென்றும் பேரணி அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேசமயம் கூட்டணியில் ஓர் அங்கமாக இருக்கும் அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸினதும் கூட்டணியினதும் தமிழ் ஈழக் கொள்கையை முன்வைத்துத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியும் சில தொகுதிகளில் போட்டியிடவிருக்கிறது.

### சுந்தரர் கூட்டணி

முன்னாள் வவனியா எம்.பி.யும் அடங்காத் தமிழர் தலைவருமான திரு. சி. சுந்தரலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கெதிரான கட்சிகளை இணைத்துக்கூட்டணியொன்றை உருவாக்க முன்வந்துள்ளார்.

காங்கேசன்துறையில்

## போட்டியிடுமாறு 'சுந்தரருக்கு' கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிடுமாறு, அத்தொகுதியைச் சேர்ந்த ஆதரவாளர்கள்,ஈழத்தமிழ் தொண்டர் சபை தலைவர் திரு சி. சுந்தரலிங்கத்தைகோரியுள்ளனர்.

இக் கோரிக்கை பற்றி ஆலோசனை செய்யவிருப்பதாகவும், இம்மாதம் 25ம் தேதி, இது தொடர்பாக யாழ்ப்பாணம்வருவதாகவும் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பு மேற்கில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை எதிர்த்துப் போட்டியிடவே தாம் விரும்புவதாகவும், அந்த முடிவில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்றும் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான வாக்குகளை சிதறவிடக் கூடாதென்றும், இதற்காக தாம் முயற்சி செய்துவருவதாகவும் அவர் கூறினார். (க)

தந்தை செல்வாவின்

## புனித அஸ்தி நல்லடக்கம்!

யாழ்ப்பாணம், ஞாயிறு [illegible] செல்வாவின் புனித அஸ்தியைக் கொண்ட வெள்ளிக்கலசமும் [illegible] செல்வாவின் நினைவாலயம் நிறுவ ஒதுக்கப்பட்ட இடத்தில் [illegible] வைபவங்களைத் தொடர்ந்து நல்லடக்கம் செய்யப்பட்டது.

தந்தை செல்வாவின் புனித அஸ்தி அடங்கிய வெள்ளிக் கலசத்தை அவரின் புதல்வர் திரு. சந்திரகாசன் எடுத்து வந்தார்.

வண. ஆயர் அம்பலவாணர் இவ்வைபவத்திற்குத் தலைமை தாங்கினார்.

இதனை அடுத்து கிறிஸ்தவ

(10-ம் பக்கம் பார்க்க)

## சுயாட்சிக்கழகம் நாளை விண்ணப்பிக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு தமிழர்சுயாட்சிகழகம், தம்மை அரசியல் கட்சியாக பதிவு செய்யுமாறு நாளை தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பிக்கும் என கழக செயலாளர் திரு. எஸ். கோடீஸ்வரன் தெரிவித்தார்.

1970ம் ஆண்டு தேர்தலில் தமிழர் சுயாட்சி கழகம் போட்டியிட்டதாகவும் இதனால், பதிவு செய்வதில் சிரமம் எதுவும் இருக்காதென்றும் அவர் கூறினார்.

தமிழர்சுயாட்சிகழககமிட்டி ஏற்கனவே அறிவித்த நான்கு தொகுதிகளான ஊர்காவற்றுறை, திருமலை, கோப்பாய், முல்லைத்தீவு அபேட்சகர்களில் மாற்றம் எதுவுமில்லையென்

(10-ம்பக்கம்பார்க்க)

## புதிய கூட்டணி நிறுவ 'சுந்தரர்' நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக உள்ள கட்சிகளையும், இயக்கங்களையும் ஒன்று சேர்த்து மற்றொரு கூட்டணி அமைக்க, ஈழத் தமிழ்த் தொண்டர் சபைத் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

புதிய கூட்டணி ஒன்றை 'தனிநாடு' என்ற கொள்கையின் அடிப்படையில் நிறுவி, அதனை அரசியல் கட்சியாக பதிவுசெய்யவிருப்பதாக திரு. சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

தமிழர் சுயாட்சி கழக தலை

(10ம் பக்கம் பார்க்க)

## பரதநாட்டிய அரங்கேற்றம்



காரைநகர் சக்கலாவோடையைச் சேர்ந்த திரு. க. கந்தசாமி தம்பதிகளின் புதல்வியும் செல்வி மாலதி தர்மாவின் சிஷ்யையுமான செல்வி கண்ணம்மாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 28ம் திகதி சனிக்கிழமை மாலை வீரசிங்கம் மண்டபத்தில் நிகழவிருக்கிறது.

## ராஜினாமா வாபஸ்

கொழும்பு, சனி

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் தமது ராஜினாமாவை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க மத்திய செயற்குழு தலைவர் திரு க. சோதிலிங்கம் தலைமையில் கொழும்பில் இன்று கூடியபோது செயற்குழுவின் வேண்டுகோளின் பேரில் திரு. பேரின்பநாயகம் தமது ராஜினாமாவை வாபஸ் பெற்றுக்கொண்டார். (ம-இ)

இன்று வெளியாகின்றது! மா. குலேந்திரனின்

## "தந்தை செல்வா"

வாழ்க்கை விவரணப்படைப்பு

பிரதி: 3/- வி. பி. பி. உண்டு.

யாழ். சட்ட நிலையம்

பிரதான வீதி - யாழ்நகர். 6255

---

## முக்கிய அறிவித்தல்

திரு. து. நடராஜபிள்ளை (கணக்கப்பிள்ளை)

என்பவரிடம் செய்து கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நாமோ எமது ஸ்தாபனமோ பொறுப்பாளிகளில்லையென்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்:

சி. எஸ். கே. ஓயில் மில்ஸ்,

யாழ்ப்பாணம். 6218

---

## நியூ பிறில்லியன் கல்வி நிலையம்

(பதிவு இல. 10069)

தமிழ், ஆங்கில, சிங்கள், தட்டெழுத்து, சுருக்கெழுத்து

பகல்நேரம்/விடுமுறை நாட்களில்

நவீன இயந்திரங்கள், திறமையான ஆசிரியர்கள்

### வெல்டிங் டிப்ளோமா

வேறு இடங்களில் அரைகுறையாகப் பயின்றும்

காஸ் வெல்டிங்

பயிலாமல் இருப்போரின் வேண்டுகோளுக்கிணங்க விசேட சலுகை வகுப்புகள்

21-5-77 சனிக்கிழமை முதல்

### பாலன் இரும்புத்தொழிற்சாலையில்

நடைபெறுகிறது.

எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நற்சாட்சிப்பத்திரம் வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

### திருத்தணிகை,

284, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

வேலை நேரங்களில்;

### பாலன் இரும்புத் தொழிற்சாலை,

(சிவதொண்டன் நிலையத்தின் முன்பாக)

409, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

---

## மாநகரசபை யாழ்ப்பாணம்

## பகிரங்க ஏல விற்பனை

யாழ். கச்சேரி இ. போ. ச. பஸ் தரிப்பு நிலையத்திற்கு அண்மையில் உள்ள மகோக்கனி மரம் ஒன்று 31-5-77ஆம் திகதி மு. ப. 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்தி மரத்தை 3 நாட்களுக்குள் வெட்டி அப்புறப்படுத்தவேண்டும்.

க. சிவஞானம்
மாநகராட்சிமன்ற
ஆணையாளர்,

மாநகராட்சிமன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்,
17-5-77. 6247

---

## சுன்னுகம் பலநோ.கூ.சங்கம்

(வரையுள்ளது)

சுன்னுகம்

## அறிவித்தல்

சுன்னுகம் பலநோ. கூ. சங்கத்திஞல் பின்வரும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

1. 4000க்கு மேற்பட்ட சாக்குகள்.
2. கழிவு சீனி.
3. கழிவு மா.
4. தும்புத் தடிகள்.
5. சக்குத் தடிகள்.
6. தேயிலை வெற்றுப் பெட்டிகள்-

இன்னும் பல.

கேள்விப் பத்திரங்கள் 27-5-1977 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் காரியாலய வேலை நேரங்களில் வெற்றுச் சாக்குக்கு ரூபா 250/- மீளளிப்பு வைப்புப் பணமாகச் செலுத்தியும், ஏனைய பொருட்களுக்கு ரூபா 50/- மீளளிப்பு வைப்புப் பணமாகச் செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

பொது முகாமையாளர்

21-5-1977. 6253

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதி, சின்னப் பிள்ளையார் கோவில் அருகாமையிலுள்ள 3½ நி. ப. விஸ்தாரமும், பங்கற்ற நல்ல தண்ணீர்க் கிணறுமுடைய காணி பழைய வீட்டுடன் விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும்: சு. குமாரசிங்கம், முத்துக்கிருஷ்ணர் ஒழுங்கை, சுன்னுகம், 6049

யாழ்ப்பாண டவுணில் மின்சாரம், குழாய் வசதி, கிணறு, டிறெய்னேஜ், கராஜ் ஆகிய சகல வசதிகளையுடைய 3 விசாலமான படுக்கையறைகளைக் கொண்டவீடு 15பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. பார்வையிட விரும்புவோர் 23,சப்பல் வீதி, யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொள்ளவும். இறுதித் தீர்மானத் தொடர்பு 20/2, சிறப்பறி கார்டன்ஸ். பம்பலப்பிட்டி. 6206

மயிலப்புலம் வீதியில் தென்னிங்கன் வயல் 43 பரப்பு விற்பனைக்கு உண்டு. வீடுகட்ட உகந்த இடம். அரசாங்கத்தில் கடன்பெற சுத்தமான உறுதி. 10 பரப்பு துண்டு காணியும் பெற்றுக்கொள்ளலாம். வாங்க விரும்பியவர்கள் திரு. தி. சிவநாதன், இல: 2, பி.ஏ. தம்பி ஒழுங்கை, வண்ணுர்பண்ணை அவர்களை நேரில் தொடர்பு கொள்ளவும். 6219

லான்ட்மாஸ்ரர் இரண்டு சில்லு உழவுயந்திரம் நல்ல நிலையில் ரோட்டவேற்றர், கலப்பை, றெயிலர் முதலியன உட்பட விற்பனைக்குண்டு. மு. கந்தையா, 'ஞானேதயம்' செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு. 6217

புத்தம் புதிய பயனியர் (Pioneer) றெக்கோட் பிளேயர், றேடியோவுடன் கூடிய அம்பிளிபயர் (Tuner amplifier) ஸ்பீக்கல்களுடன் விற்பனைக்குண்டு. (ஸ்ரீரியோ செட்) விபரங்களுக்கு: கனியூட் அருள் தேசன், இல 7, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 6244

சகல வசதிகளுடன், பாடசாலை, கச்சேரி, கோவில் முதலியவற்றுக்குச் சமீபமாக ஒரு புது வீடு (6) ஆறு பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீசண்முகநாதன், 13, றக்கா வீதி, யாழ்ப்பாணம். 6251

யாழ். மாநகர எல்லைக் கருகாமையில் கொக்குவில் பழைய தபால் கந்தோருக்கு முன்பாக நான்கு பரப்புக் காணி வீடு கட்ட உகந்தது. மா, தென்னை, கக்கூசுடன் உள்ளது. ஆ. சொர்ணலிங்கம், "சொர்ணகிரி" கொக்குவில். 6213

### தேவை

Book keeping தகைமை உள்ள ஒரு பெண்ணும், கணக்காளர் பதவிக்கு ஒரு ஆணும் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும். கொழும்பு ஸ்ருடியோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6222

யாழ்ப்பாண மாநகரசபையின் இருமைல் சுற்றுடலில் கராஜ் மற்றும் சகல நவீன வசதிகளுடன் சிறிய வீடுவாடகைக்குத் தேவை. விபரங்களுக்கு: டாக்டர் ச. இராஜேந்திரம், அரசினர்வைத்தியசாலை, யாழ்ப்பாணம். 6242

### வகுப்புகள்

வெல்டிங் (Electric & Gas மூன்று மாதம், இலெக்றிக் வயறிங் மூன்று மாதம், ரேடியோ ஆறு மாதம் காலை, பிற்பகல், மாலை நேர வகுப்புகள் எமது N.I.E.T. டிப்ளோமா பெற்று வெளிநாடுகளில் ஏராளமானேர் வேலை பார்க்கிருர்கள். National Institute of Engineering Technology மைற்மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6210

லண்டன் (சிற்றி—கில்ட்ஸ்) எலெக்றிக்கல் என்ஜினியறிங் புதிய பாடத்திட்டங்களின் (மாலை) வகுப்புக்களுக்கு. ஸ்ரீசத்யதாஸன், யாழ்ப்பாணக் கல்வி நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6245

### வாடகைக்கு

நெல்லியடி மத்திய சந்தைக்கு முன்பாக யாழ்ப்பாண வீதியில் சகல வசதிகளும் கொண்ட கடை ஒன்று காலியாக உள்ளது. ஸ்ரோர் வசதிகளும் உண்டு. விபரங்களுக்கு:- ஆனந்தா ஸ்ரோர்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 6231

### கல்வி

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம், பொது அறிவு, ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக்கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 6212, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6212

### இலவசம்

"வேல்களிலே சிறந்த வேல்" "வேல்களையே வெல்லும் வேல்" கருத்தாழம் மிக்க சமய துண்டுப் பிரசுரம். தேவையானேர் எழுதுங்கள். இலவசமாக அனுப்பப்படும். த: இ. இன்பநாதன், சரசாலை, சாவகச்சேரி. 5984

### விடுதி

யாழ். பல்கலைக்கழக வளாகம் அல்லது மகளிர் கல்லூரி- இரண்டு மாணவிகளுக்கு விடுதி வசதியுண்டு. கடித மூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 6256, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6256

---

## பண்ணும் பரதமும்

(முத்திங்கள் சங்கீத பரதநாட்டியச் சஞ்சிகை)

### மலர்-2

(சித்திரை, வைகாசி, ஆனி)

ஆசிரியர்:

பி. சந்திரசேகரம், எஸ். கே. சிவபாலன்

திருமதி ஞானமணி செல்லையா

N. C. O. M. S. பரீட்சைக்குரிய விரைவு மீட்டற் பயிற்சி மலராக ஆனி உத்தரத் திருநாளன்று வெளிவரும்.

பிரதிகள் சந்தாதாரர்களுக்கு மட்டுமே.

வருட சந்தா: ரூபா 8

கௌரவ செயலாளர்

இலங்கை இசைப் பேரவை,

மே/பா, கலைநிலையம் லிமிட்டெட்,

303, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7707. 6246

---

ANNA அண்ணா

பொது மக்கள் தேவையை உணர்ந்து

அவர்களின் வசதிக்காக

அண்ணா கோப்பி நிறுவனம்

தனது

புதிய கிளையொன்றை சுன்னுகத்திலும்

ஆரம்பிப்பதை மகிழ்ச்சியுடன்

அறியத்தருகிறார்கள்

இடம்: சுன்னுகம் மத்திய சந்தை
புதிய கட்டிடம் இல. 1 (ஒன்று)

காலம்: 23-5-77 திங்கட்கிழமை
காலை 9-52 மணிமுதல் 11-00 மணிவரையுள்ள சுபவேளை.

ஆரம்ப விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்

அண்ணா கோப்பி நிறுவனத்தினர்

மேற்படி கிளையில் உங்கள் முன்னிலையில் உடனுக்குடன் வறுத்து அரைக்கப்படும் அண்ணா கோப்பியைத் தினமும் பெற்றுக்கொள்ளலாம்.

## அண்ணா தொழிலகம்

கிளை: இல, 4, நவீன சந்தை
யாழ்.நகர்
தொலைபேசி: 7413

இணுவில்.
தொலைபேசி: 7412



# அவன் → வேலை தேடுகிறான்!

கல்முனை சி. சங்கரப்பிள்ளை

'புடிக்கிற ஆளைப்புடிச்சி எடுக்கிறதை எடு. நாள் போகப் போக வயது போகுது கிருபைராசாக் கிளாக்கரைப் புடிச்சி அவருக்கு ஒரு அரை எடுத்தால் சரியாம், லேபர் ஆபிசில் அவர்தான் பெரிய வராம்''

யாரோ சொல்லிய இப்புத்தி துரையப்பாவின் சிந்தனையை வேகமாகத் தூண்டியது. குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த அவன் ஒரு முடிவுக்கு வந்தவனாக தந்தையின் முன்பணிந்து நின்றான். தாய் அவனுக்கு இல்லை.

''என்னடா மகன்'' மொட்டைத்தலையை கைகளால் தடவியபடி கேட்டார் அவர்.

''ஒரு பத்து ரூபா தாருங்கோ அப்பா. நான் லேபர் ஆபிஸுக்குப் போயிற்று வாறன்''

''அதுக்கேன்டா பத்து ரூபா''

''கிருபைராசாக் கிளாக்கரைக் காணவேணும். அவருக்கு ஒரு பத்து ரூபா கொடுத்தால் போதுமாம். உத்தியோகம் கையிலேயாம்''

''பத்து ரூபாய்க்கு நான் எங்கடா மகன் போறது. பால்க்காரனும் கடன் சொலிற்றுப் போறான்... சரி நின்டுகொள். சுப்பன்ர வாடிக்குப் போயிற்று வாறன். அவர் எப்படியும் தருவார்''

தொழிற் கந்தோருக்கு வந்த துரையப்பா வெளியே நின்றபடி உள்ளே தலையை மெல்ல நீட்டிப் பார்த்தான். பெரிய கிளாக்கர், இரண்டாவது கிளாக்கர், பியோன்...கிருபைராசாக் கிளாக்கரின் இடம் மட்டும் காலியாக இருந்தது.

எங்கே போய்விட்டார் அவர்? லீவோ அல்லது வெளியில் எங்கேனும்...?

மெதுவாக உள்ளேபோய் பியோன் பக்கம் திரும்பிய போது பியோன் அவனைப் பார்க்கவும் கிளாக்கர் அங்கே வரவும் சரியாக இருந்தது.

கிளாக்கரின் விழிகள் அவன் மேல் இரண்டு நிமிடங்களுக்கு நிலைத்தது. எத்தனையோ பேர்களைப் பார்த்து பழகியவிழி. எத்தனையோ பேர்களுக்குப் பதில் சொல்லிய விழி. அந்த விழிக்கு துரையப்பாவின் நிலைமை புரியாமலா இருக்கும்? மேசையிலே அமர்ந்து பைலைப் புரட்டிக் கொண்டிருந்தார் அவர்.

அடக்கத்துக்கு ஏது இடம்? அவர் அவனைக் கவனித்ததாக இல்லை. அவராகவே என்னவென்று கேட்காமல் தானாகக் கூறினால் அவருடைய வேலைகளைக் குழப்பியதாக முடியுமல்லவா?

வேண்டுமென்றே என்னவோ பைல்களை எடுப்பதும் புரட்டுவதும், எழுதுவதும் கிறுக்குவதுமாக இருந்தார். நேர்மையும் நம்பிக்கையும் அவர் கடமையில் இழையோடிக்கொண்டிருந்தன.

''ஐயா''- சுருதியின் ஏற்றத் தாழ்வு அவன் பணிவைக் காட்டியது.

''யேஸ் துரைப்பாவா'' குனிந்த தலை -நிமிராமல் கிளாக்கர் இப்படிக் கேட்டார்.

அவனுக்கு தூக்கிவாரிப் போட்டது. மௌனமாகவே நின்றான். மீண்டும் அவர் கேட்டார். ''என்னடாப்பா விஷயம்?''-கிளாக்கரின் முகம் துரையப்பாவை நோக்கியது.

இரண்டுநிமிடங்கள் மட்டிலும் அப்படியே நின்ற அவன் அவருடைய பைலின்மேல் கையைவைத்து இரகசியம் பேசும் குரலில் ஏதோ கூறினான். உடனே சீறிவிழுந்தார் கிளாக்கர். ''ஐசே! கெட் அவுட்...''- அதிகமான ஆங்கில வசனங்களை தாறுமாறாக உபயோகித்தார் அவர்.



''சனியன் என்ன வேலை பாத்தன். எனக்கு ஏன் இந்தக் குறுக்குப்புத்தி'' தன்னைத் தானே நொந்து கொண்டான் அவன். மற்றய விழிகளும் அவன் மேல் விழ, பரிதாபப் புன்னகை யொன்றை உதிர்த்துவிட்டு பச்சைநோட்டையும் எடுத்துக்கொண்டு, புலிக் கூண்டிலிருந்து தப்பியோடும் நரியாக அவன் வெளியே ஓடினான்.

இன்னும் அவன் மனதில் அமைதியில்லை. எப்படியும் அவரிடம் மன்னிப்புக் கேட்டுவிட வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

கந்தோர் விட்டுக் கிளாக்கர் வெளியவந்தார். அவர் பார்வை முதலில் துரையப்பாவின் பக்கம் சென்றது. கையோடு கையைப் பிசைந்தபடி ஒழுங்காக நின்று தனது மரியாதையைச் செலுத்தினான் அவன். அது அவருக்குப் பிடித்திருக்கவேண்டும். அவர் அவன் பக்கம் சென்றார். ''மன்னித்து விடுங்க ஐயா. உங்களைத் தவறாகப் புரிந்து விட்டேன்'' என்று சொல்ல நினைத்தான். ஆனால் அதற்குள் கிளாக்கர் முந்திவிட்டார்.

''முந்தி கையைக் காலை ஆட்டினாய் என்ன விசயம். எவ்வளவு வைத்திருக்கிறாய்?''

அவனிடமிருந்த அச்சம், பயம் இருந்த இடம் தெரியாமல் ஓடியது. தலையிலேயிருந்த பெரியதொரு சுமை நீங்கிவிட்டதைப்போன்றதொரு மகிழ்ச்சி. உத்தியோகம் கிடைத்துவிட்டதைப் போன்றதொரு எண்ணம்.

அவன் பேசவில்லை. அதற்கிடையில் தலையிலும் அவனுக்கு ஒரு சொறி.

''ஏன்டா அப்பா சொல்லன்...... கேட்கிற கேள்விக்கு ஒழுங்காகப்பதில்சொல், நிச்சயம் எடுபடலாம்'' சுருக்கமான பதிலைக் கூறிவிட்டு மீண்டும் அந்தக் கதை பேச்சுக்குள் நுழைவதற்காக திரும்பினார்.

உடனே அவன் 'ஐயா' என்று அழைத்து அவனது கஷ்டநஷ்டம் முழுவதையும் ஒன்றுவிடாமல் கூறி அழுது நின்றான்.

அவர் ஆழ்ந்த சிந்தனைக்குள் மூழ்கிவிட்டு ''உன் நிலைமையைப் பார்த்தால் எனக்கும் பரிதாபமாகத்தானிருக்கு. ஆனா...'' ஏதோ ஒன்றைக் கடுமையாகச் சிந்தித்துவிட்டு இறுதியில் ''என்சினியர்தான் செலக்ட்பண்ணுறவர். அவருக்குக் குறைந்தது ஒரு பாட்டியென்றாலும்...''

''பரவாயில்லை. நான் வைக்கிறேன் ஐயா. எவ்வளவுக்குள்ள முடியலாம் ஐயா''

''ஒரு முன்னூறு நானூறு''

அவன் சற்று அசைந்தே போய்விட்டான்.

''என்ன யோசிக்கிறாய்'' என்றார் அவர்,

''அருமையான மனுசன்; என்மீது அவருக்கு எவ்வளவு அக்கறை'' என்று எண்ணியவாறு அவன் கூறினான்.'இல்லை ஐயா மூணுவருசமாகுது ஒரு வேலைக்கும் அனுப்புறாங்கல்ல'

''சந்தர்ப்பம் வந்தால் அனுப்புவம்''-சுருக்கமான பதிலுடன் அவர் முகம் மீண்டும் மேசையிலே பதிந்து கொள்கிறது. அதன்பின் அவரோடு கதைக்கலாமா கூடாதா என்பது அவனுக்குத் தெரியவில்லை. ஒருவேளை அப்படியும் இருக்குமோ?

தொழில்நுட்ப உத்தியோகத்தரின் இரு மாடிகளைக் கொண்ட அந்தவீடு தெருவை அடுத்து இருந்தது. கதவு ஜன்னல்கள் திறந்திருந்தன. உள்ளேயிருந்த பொருட்கள் தெளிவாகத் தெரிந்தன. நாலாபுறமும் பார்வையைச் செலுத்திய அவன், இறுதியில்ஒரு பெருமூச்சு விட்டான். நானூற்றி ஐம்பதுரூபா சம்பளத்தால் இரண்டு லட்சம் பெறுமதியான இந்த வீட்டை எப்படிக் கட்ட முடிந்தது?

ஐந்தாவது முறையாக 'தொர' என்றான். பதிலில்லை.

உள்ளே எழுகின்ற கதையும் சிரிப்பும் வெளியே வருகின்றது. அவனுடைய குரலுக்குந்தான் உள்ளே செல்லத்தடை. கதையினுள் மூழ்கிக்கிடந்த அவர் தற்செயலாக வெளியே வந்தபோது தான் அவனைக்கண்டார். பரந்தமார்பிலே திரண்டு கிடந்த தங்கச் சங்கிலியை கைகளால் உருட்டியபடி ''என்ன விஷயம்'' என்றார்.

''நாளைக்கு இன்ரவியூ, அது தான் உங்களைப் பார்த்துப் போவம் என்டு வந்தநான்''

''இன்ரவியூ என்டா போறது தானே. அதுக்கேன் என்னிடம்''

''ஒன்டுமில்லை ஐயா. எந்த மட்டில் உத்தியோகம் வரும்'' -ஒருவாறு தன்னை சமாளித்துக்கொண்டு கூறினான் அவன்.

''அதுதான் சொல்லமுடியாது. நாங்க எங்கட தெரிவை 'எம். பி'க்கு அனுப்புவோம், அதில் அவர் ஒரு தெரிவு தெரிவார்'' என்றார் அவர்.

நேர்முகப்பரீட்சை நடந்தது. மற்றவர்களிடம் கேட்டவைகளை விட இரண்டொரு கேள்வியுடன் அனுப்பி விட்டார் என்ஜினியர்.

வேலுவுக்கும் துரையப்பாவுக்கும் சண்டை சச்சரவுகள் படுக்கையிலே கிடந்த வேலன் எழும்பவே இல்லை. அவர்கள் வீடுவளவு என்பன மெல்ல மெல்ல அவர்களை விட்டு நீங்கிக்கொண்டிருந்தது. எம். பி. யின் வீடும் தானுமாக இருந்தான் துரையப்பா.

நீண்ட நாட்களின் பின் எம். பி. வருகிறாராம்.

கடவுளை நாடிச்செல்லும் பக்தர்கள் கூட்டமொன்று எம். பி. யின் தரிசனத்துக்காக வெளியே நின்றது. அதற்குள் துரையப்பாவும் ஒருவன். ஆனால் எல்லோருக்கும் கிடைத்த ஒரே பதில் ''ஐயாவைக் காணமுடியாது. சுகமில்லை. தூங்கிவிட்டேயிருக்கார். டொக்டர்மார்கள் சோதிச்சிட்டு இருக்காங்க. போயிற்று நாளைக்கு வாங்க''.

அப்போது கூட்டத்தினுள் பிசுபிசுப்பு எழுந்தது. ''உத்தியோகம் இல்லாட்டியும் பரவாயில்லை. குடுத்த காசெண்டாலும் தங்கிற்றால்போதும்'' இப்படிப் பலபேர்கள் சொல்லிக்கொண்டது துரையப்பாவின் செவிகளினுள்ளும் நுழைந்தது.

மாலை எட்டு மணியளவில் இரு பொலிஸ்காரர்கள் வெளியே வந்து எல்லோரையும் போய்விடும்படி எச்சரித்தனர். அதன்பின் அவர்களால் என்னதான் செய்ய முடியும்? பதினைந்து இருபது நிமிடங்களில் அவ்விடம் வெறுமையாகக் காட்சியளித்தது.

அடுத்த நாளும் இதே கூட்டம். இதே பதில்... இறுதியில் இதே எச்சரிப்பு.

படுக்கையில் கிடந்த வேலனுக்குத் தண்ணீர் வென்னீர் ஒன்றுமே இறங்கவில்லை. எலும்பும் தோலுமாகக் காட்சியளித்தார் அவர். மகன் மேல் கொண்ட பற்று பாசம் அவரை அப்படிச்செய்தது.

இன்னும் மூன்று தினங்களால் எம். பி. போய்விடுவார், அதற்கிடையில் அவரை எப்படியும்சந்திக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தான் துரையப்பா.

வழமையான எச்சரிப்புடன் கூட்டம் கலைந்தது. பின் மெதுவாகக் கதவு திறபட்டது. வெளியே யாரும் நின்றார்களா என்று ஜாக்கிரதையாகப் பார்த்தபடி வெளியே வந்தார் ஒருவர். அவர்தான் எம். பி. ''மக்கு ஜனங்கள்'' தனக்குள்தானே ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்த்துவிட்டு நாற்காலியிலே அமர்ந்தார். இவ்வளவு நேரமும் மரத்தின் மறைவிலே நின்றுகொண்டிருந்த துரையப்பா திடீரென அவர்முன் தோன்றியது பொலிஸ்காரர்களுக்கு ஆச்சரியமாகவிருந்தது. எம். பி. யும் சற்று அசந்தே போய் விட்டார்.

''ஐயா'' என்று கத்தியபடி அவனது கஷ்ட நஷ்டமெல்லாம் அழுதும் அழாமலும் கூறினான். ''எப்படியும் இந்த மாசம் கடிதம் வரும். வராவிட்டால் கொழும்புக்கு ஒரு தரம் போய்வரணும்'' என்று கூறிவிட்டு பரிதாபமாக அவனைப் பார்த்து ''எங்கே பிறந்த நீ. எங்கே வளர்ந்த நீ. என்ன செய்துகொண்டிருக்கிறாய்'' என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுவிட்டுஅவர்மேல் பச்சாத்தாபப்பட்டார்.

''அப்பா மரணப் படுக்கையிலே கிடக்கிறார். இதைவிட்டால் எனக்கு வேறு தொழிலுமில்லை. பிழைப்புமில்லை. எப்படியோ நீங்கதான் கைதூக்கிவிடணும்.

அவர் சற்று யோசித்தார். ''புதன்கிழமை நான் கொழும்புக்குப் போறன். அங்க வா நான் மினிஸ்ரிக்குக் கூட்டிப் போய் கதைக்கிறன்''

வீடு வளவுக்காக வாங்க வேண்டிய பணம் இன்னும் நூற்றிஐம்பது ரூபாவேதான் இருந்தது. அதை வாங்கினால் வேலனும் துரையப்பாவும் வீட்டைவிட்டு வெளியேற வேண்டும். ''வீடு வளவா? உத்தியோகமா?'' வேலனின் மனதில் பலத்த போராட்டம்.

மரணப்படுக்கையிலேயும் தன் மகன் நல்லாயிருப்பதையே அவர் விரும்பினார். மீதி பணத்தையும் வாங்கிக் கொண்டு அந்த வீட்டிற்கான உறுதியைக்கொடுத்துவிடுவதென்று முடிவு எடுத்தார் அவர். கொழும்புக்கு வந்த துரையப்பா எம். பியோடு கதைத்தான். 'ராக்ஸி' அங்கும்

(8ம் பக்கம் பார்க்க)

## விவேகானந்தர் வாழ்வில்

விவேகானந்தர் இங்கிலாந்தில் தங்கியிருந்த சமயம் வீரசாதனை ஒன்று நிகழ்ந்தது. வயல்களினூடே நடந்து போய்க்கொண்டிருந்தார் சுவாமிஜீ. ஒரு வெள்ளைக்காரக் கணவனும் ஒரு சீமாட்டியும் (குமாரி முல்லர்) வெறிகொண்ட காளையொன்றால் துரத்தப்பட்டுத் திண்டாடினர். கணவான் ஒரே ஓட்டமாக ஓடிக் காலைக்குத் தப்பி மறுபுறம்சென்று பிழைத்துக்கொண்டார். குமாரி முல்லர் தம்மால் முடிந்தமட்டும்ஓடிஓடிப்பார்த்து, மேலும் ஓடுவதற்குச் சக்தியில்லாமல் தரையிலே சரிந்து விழுந்துவிட்டார். சுவாமிஜி இதைப் பார்த்தார். சீமாட்டியும் தப்பியோடுமாறு செய்வதற்கு நேரமோ வழியோ இல்லை. உடனே தரையில் கிடந்த சீமாட்டிக்கு முன்னால் போய்க் கைகளைக் கட்டிக் கொண்டு காளை பாய்ந்துவரும் பாதையில் காளையை நோக்கியவாறு விவேகானந்தர் திடமாக நின்றார். 'இதுதான் முடிவு' என்றுகூட அவருக்குத் தெற்றெனத் தோன்றிற்று. ஆனால் உள்ளத்தில் அவர் கணக்கு ஒன்றுபோட்டவாறு நின்றார் இந்த மூர்க்கக் காளை என்னைத் தூக்கி எறிந்தால் என் கனமுள்ள உடல் எவ்வளவு தூரம்போய் விழும்! என்று கணக்குப்போட்டவாறு நின்றார்! ஆனால் தெய்வசித்தம் வேறாக இருந்தது. புருஷரிஷபமான சுவாமிகளின் கம்பீர சொரூபத்தின்முன்பு, துள்ளிவந்த முரட்டுக் காளை திடீரென்று நின்றது; தலையை நிமிர்த்திப் பார்த்துத் திரும்பிஓடியே விட்டது. குமாரி முல்லர் பிழைத்தாள். சுவாமிகளுக்கும் கேடு ஒன்றும்நேரவில்லை. அச்சம் தவிர்த்து ஆண்மையுடன் நின்ற அவருடையகாட்சி,காளையையும் நிம்மதியுறச் செய்தது.




சட்டமும் சமுதாயமும்- 17

# கழுதையைக் கண்டுபிடித்தேன் சன்மானம் கேட்டால், ஒப்பந்தம் உண்டா, என்கிறார் சொந்தக்காரன்!

ஒப்பந்தம் என்று எல்லோரும் பேசிக்கொள்கின்றோம். உடன்படிக்கை என்றும் பேசிக்கொள்கின்றோம். ஆனால் இவை இரண்டுக்குமான வேறுபாட்டை விளங்கிக்கொள்ள முயலுவதில்லை. மாறாக இரண்டும் ஒன்றே என்று எண்ணியும் விடுகின்றோம். உண்மை என்னவென்றால், ஒப்பந்தம் ஓர் உடன்படிக்கைதான், ஆனால் எல்லா உடன்படிக்கையும் ஒப்பந்தமல்ல. உங்களுடைய வீட்டில் இன்றிரவு உணவுண்ணும்படி நீங்கள் என்னைக் கேட்கின்றீர்கள். நானும் ''நல்லதாய்ப் போயிற்று'' என்று உடன்படுகின்றேன். இங்கே எனக்கும் உங்களுக்கும் இடையில் ஓர் உடன்படிக்கை உருவாகியிருக்கின்றது என்பதை எவரும் மறுக்கமாட்டார். ஆனால் உங்களுக்கும் எனக்குமிடையில் ஏற்பட்ட இந்த உடன்படிக்கை ஒப்பந்தமா?

இன்றிரவு உங்கள் வீட்டில் உணவுண்ண வருவதாக உடன்பட்டேன். ஆனால் உம்முடைய சாப்பாடென்ன ''கண்டறியாத சாப்பாடா'' அதுவும் வெள்ளிக்கிழமைச் சாப்பாடும் ஒரு சாப்பாடாகுமா? ''நக்கினார் நாவிழந்தார்'' என்ற நிலைமை எனக்கேன் என்றெண்ணி உம்முடைய வீட்டிற்கு உணவுண்ண வரவில்லை. உடன்பட்டபடி உணவுண்ண வரவில்லை என்பதற்காக எனக்கெதிராக நீர் நடவடிக்கை எடுக்கமுடியுமா? அதாவது சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா: முடியாதென்பது உங்களுக்குத் தெரியும்.

என்னிடம் உள்ள லொறியை ஐம்பதினாயிரம் ரூபாய் தந்தால் உமக்கு விற்கச் சம்மதம் என்று நான் கூறுகின்றேன். நீர் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு எனது லொறியை வாங்க ஒம்படுகின்றீர்; இங்கே உமக்கும் எனக்கும் இடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் உடன்பட்டபடி எனது லொறியை வாங்க நீர் மறுக்கிறீர். உமக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுக்கமுடியுமா? முடியும்.

முன்னைய உதாரணத்தில், உணவுண்ண வராது விடுவதன் மூலம் உடன்படிக்கையை மீறிய எனக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கமுடியவில்லை. பின்னைய உதாரணத்தில் என்னுடைய லொறியை வாங்க ஒம்பட்டுவிட்டு இப்போது அதை வாங்க மறுப்பதன் மூலம் உடன்படிக்கையை மீறும் உமக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க எனக்கு முடிகின்றது.

எந்த உடன்படிக்கைத் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கமுடியுமோ அந்த உடன்படிக்கை ஒப்பந்தம் எனப்படும். அதாவது சட்டத்தால் வலுவுறுத்தப்படக்கூடிய (Enforceable by law) உடன்படிக்கைகள் ஒப்பந்தம் எனப்படுகின்றன. நாம், நாளும் பொழுதும் நம்மை அறியாமலேயே உடன்படிக்கைகள் பலவற்றைச் செய்துகொள்கின்றோம். அவ்வுடன்படிக்கைகளுட் பல ஒப்பந்தங்களாயும் அமைகின்றன. அவை ஒப்பந்தங்கள் என்றும் அவற்றுக்குச் சட்ட விளைவுகள் (Legal consequences) உண்டென்பதையும் உணராமல் நாம் நாளாந்த நடைமுறைகளாக வழக்காற்றுச் செயல்களாக அவற்றைச் செய்துகொண்டு போகின்றோம். இன்றைய உலகில் ஒருவர் தமது வாழ்வின் பொருட்டுப் பலருடன் பல்வேறு வகைப்பட்ட உறவுகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது. உத்தியோகம் என்று பேசும் அரசாங்கத்துடன் அல்லது தொழில் தருவோனுடன் (Employer) ஒப்பந்த உறவு கொள்ள வேண்டியுள்ளது. குடியிருப்புக்கான உறவு, சாமான் வாங்குவதற்காக, விற்பதற்கான உறவு, வாகனத்திற் பயணம் செல்வதற்கான உறவு, என்று பலவகையான உடன்படிக்கைகளை நாம் செய்து கொள்கிறோம். இவ்வுடன்படிக்கைகளில் ஒருசில வாய்ப்பேச்சளவில் அமைகின்றன. ஒருசில எழுத்துருவில் பொறிக்கப்பட்டு இருதிறத்தவராலும் ஒப்பமிடப்படுகின்றன. வேறு சில வழக்காற்றுச் சம்பிரதாயத்தின் மூலம் அமைகின்றன. எப்படியாக அவை அமைந்தாலும், உடன்படிக்கைகள் ஒப்பந்தமாக இருக்கவேண்டுமானால் அவற்றுக்குச் சில சம்பிரதாயங்கள் அவசியம். ஓர் ஒப்பந்தம் செல்லுபடிகொண்டதாக

முனைவுசெய்கிறேன். நீர் ஐந்நூறு ரூபாக் கொடுத்து அதை வாங்குவதாக உறுதிமொழி தருகிறீர். இந்த உதாரணத்தில் முனைவானது வெளிப்படையாக உள்ளது.

காணாமற்போன எனது கழுதையைக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து தருவோருக்கு ஐம்பது ரூபா வெகுமதி தருவதாக நான் செய்தித்தாளில் விளம்பரம் செய்கிறேன். புங்குடுதீவுப் பொன்னையர் அதைப் பிடித்து வந்து என்னிடம் தருகின்றார். இந்த உதாரணத்திலும் முனைவானது வெளிப்படையாகவே உள்ளது.

பலாலி ரோட்டில் கிரிமலை பஸ் போகிறது. வசுத்தரிப்பு நிலையத்தில் நிற்கின்ற நான் கையைக் காட்டியதும் பஸ் நிற்கிறது; நான் ஏறுகிறேன்; காசைக் கொடுக்கிறேன்; உரிய

**காணாமல்போன கழுதையைக் கண்டுபிடித்துக் கொடுக்கின்றான் ஒருவன்—பத்திரிகை விளம்பரப்படி சன்மானம் வேண்டுமென்றும் கோருகிறான்—'இதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டோமா? சன்மானம் தரமுடியாது' என்று மறுக்கிறான் கழுதைக்காரன். இதற்குச் சட்டம் என்ன சொல்கிறது?**

இருக்கவேண்டுமானால் முனைவு (Offer) ஏற்பு (Acceptance) பிரதிபயன் (Consideration) என்று மூன்று முக்கியாம்சங்கள் பொருந்தியதாயும் பிழையான விளக்கம் தவறான விபரிப்பு என்பன அற்றதாயும் வலோற்காரம் பராயமின்மை சட்டவிரோதம் ஆகிய குறைபாடுகள் இல்லாததாயும் இருத்தல் அவசியம்.

இவருடைய மன ஒருமைப்பாட்டின் அடிப்படையில்தான் ஒப்பந்தம் உதிக்கின்றது. கண்ணிரண்டும் ஒன்றையே காண்பதுபோல கட்சியினர் இருவரும் ஒரு பொருளையே கருதியிருக்கவேண்டும். நீர் பூனை என்று சொல்ல, நான் நாய் என்று அதனை விளங்கிக்கொண்டால் அங்கே மனம் இரண்டிலும் ஒருப்பாடு (Consensus at Idem) இருப்பதாகச் சொல்லமுடியாது. அப்படி மன ஒருப்பாடு இல்லாத சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் உருவாக முடியாது.

இடத்தில் இறங்குகிறேன். இங்கே, பஸ்சில் ஏறும்படி வசு நடாத்துநர் என்னைக் கேட்கவில்லைத்தான். ஆனால் ரோட்டில் பஸ் போதலாகிய செயல் உட்கிடையான ஒரு கொடைமுனைவே. வசுவை மறித்து நான் ஏறி, கட்டணத்தைச் செலுத்தியவுடனும் நான் அந்தக்கொடைமுனைவை ஏற்றுவிடுகிறேன்; ஒப்பந்தம் உருவாகிவிடுகிறது.

கொடைமுனைவு குறிப்பிட்ட ஒருவருக்கு மட்டும் செய்யப்படலாம்; அல்லது பொதுவில் உலகத்தில் எல்லோருக்குமே செய்யப்படலாம்; அல்லது குறிப்பிட்ட ஒரு கூட்டத்தினருக்கு மட்டும் விடுக்கப்படலாம். எனது சைக்கிளை உமக்கு விற்பதற்கு நான் கொடைமுனையும்போது அது குறிப்பான ஒருவருக்கு விடுக்கப்படும் முனைவு எனப்படும். காணாமற்போன கழுதையைப் பிடித்துத் தருவோருக்கு வெகுமதி வழங்கப்படும் என்று விளம்பரம் செய்யும்போது

**செ. சிறிக்கந்தராசா**

ஒரு திறத்தவர் ஒன்றைச் சொல்ல மற்றத் திறத்தவர் அதை நிபந்தனையற்று ஏற்பதன் மூலம் தான் ஒப்பந்தம் எழுகின்றது. ஒருவர் ஒரு பொருளை அல்லது சேவையைக் கொடுக்க முன்வருகிறார் என்று அச்செயல் முனைவு எனப்படும். இந்த முனைவை அது எவரை நோக்கி முனையப்பட்டதோ அவர் ஏற்றுக்கொண்டால் அது ஏற்பு எனப்படும். கொடுக்க முனைவோன் முனைவதையே, ஏற்போன் ஏற்றல் வேண்டும். இல்லாவிடில் மன இசைவு ஏற்பட முடியாது.

இந்த முனைவு ஏற்பு என்ற சங்கதிகள் ஒப்பந்தச்சட்டத்தில் மிக முக்கியமானவை. எனவே அவற்றை ஒரு சில உதாரணங்கள் மூலம் விளங்கிக்கொள்ள முயல்வோம்.

முனைவு என்பது வெளிப்படையானதாக இருக்கலாம் அல்லது நடத்தையிலிருந்து ஊகிக்கப்படுகின்ற ஒன்றாக இருக்கலாம். நான் என்னுடைய சைக்கிளை ஐந்நூறு ரூபாவுக்கு உமக்கு விற்க

அம்முனைவு உலகோருக்குப் பொதுவில் விடுக்கப்பட்ட முனைவாகிறது.

முனைவுகள் எல்லாம் முனையப்பட்டவருக்கு (Offeree) அறிவிக்கப்படுதல் வேண்டும். முனைவு ஒன்று செய்யப்பட்டுள்ளது என்ற அறிவின்றி, அதனை ஒருவர் ஏற்கமுடியாது. இதைச் சரியாக விளங்கிக்கொள்ளவேண்டும். ஓர் உதாரணம் உதவியாக இருக்கும்.

காணாமற்போன எனது கழுதையைக் கண்டுபிடித்துத் தருவோருக்கு ஐம்பது ரூபாத் தருவதாக ஈழநாடு பத்திரிகையில் நான் ஒரு விளம்பரம் போடுகிறேன். நீர் ஈழநாடு பார்ப்பதேயில்லை. அதில் வந்த என்னுடைய விளம்பரம் பற்றியும் உமக்குத் தெரியாது. உம்முடைய ஆட்டைத் தேடிக்கொண்டு போனபோது என்னுடைய கழுதை உமக்கு அகப்படுகின்றது. அது என்னுடைய கழுதை என்று யாரோ சொல்ல நீர் அதை என்னிடம் கொண்டுவந்து தருகிறீர். பின்னர், அந்த விளம்பரம்

(9-ம் பக்கம் பார்க்க)

# தேர்தல்கால வசைமாரிகள்

— வர்ணம் —

தேர்தல் பிரசாரங்களின்போது தனிப்பட்டவர்களை விமர்சிப்பதில் ஜனதா கட்சி ஈடுபடமாட்டாது. காந்தியநெறிகளின்படியே கட்சிப் பிரசாரங்கள் நடைபெறும் என்று பாரதப் பிரதமமந்திரி திரு. மொரார்ஜிதேசாய் அவர்கள் சில தினங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் அறிவித்தார்.

பழுத்த காந்தியவாதியும், அரசியல் அனுபவம் மிக்கவரும், இந்தியாவின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான திரு. தேசாய் அவர்கள் தேசநலனுக்கும், மக்கள் ஒழுக்கத்திற்கும் தேவையான ஒரு முன்மாதிரியான இக் கருத்தினை வெளியிட்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால், அக் கருத்தினை அவர் வெளியிட்டிருக்கும் இடம் அல்லது மாநிலம் தான் நமது கவனத்தை ஈர்ப்பதாய் உள்ளது.

பல கட்சிஅரசியல் செயல்படும் நாடுகளில் அரசியல் தலைவர்கள் ஒருவரை ஒருவர் தனிப்பட்ட முறையில் விமர்சித்துக்கொள்வது புதுமையான விஷயமல்ல. ஆனால் தனிப்பட்ட சொந்த விஷயங்களையெல்லாம் நடுத்தெருவுக்கிழுத்து ஒருவரை ஒருவர் ''சின்னா பின்னமாககிழித்தெறியும்'' போக்கு இந்தியாவில் பல மாநிலங்களிலும் பரவலாக நிலவும் ஓர் அம்சம்தான். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் 'பக்கத்து வீடான' தமிழ்நாட்டில் இத்தப் போக்கு எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது என்பது நன்கு வெளிச்சமான ஒரு விஷயம். மக்கள் செல்வாக்குப் பெற்றுள்ள ஒரு தலைவர் ''வெறும் கூத்தாடி'' என்று மாத்திரமின்றி அவரது சொந்த வீட்டுச் சமாச்சாரமெல்லாம் சந்திக்கு இழுக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டதையும், ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட இன்னொரு தலைவர் அக் குற்றச்சாட்டுகளின்படி அவர் குற்றவாளியென்று நிரூபிக்கப்படாத நிலையிலேயே 'ஊழல் மன்னன்—ஊதாரி—சனியன்' என்றெல்லாம் வசைமாரி பொழியப்பட்டதையும் நாம் அறிவோம்.

சாதாரணகாலத்திலேயே இவ்வாறு நடந்திருப்பின் 'எட்டிக்குப் போட்டி' என்று தேர்தல் பிரசாரம் நடைபெறும் இந்தச்சமயத்தில் கேட்கவேண்டுமா?

அண்மையில் நடந்து முடிந்த லோகசபை தேர்தல் பிரசாரங்களின்போது, திரு. மொரார்ஜி தேசாய் அவர்களை சிறுமைப்படுத்தும் வகையில் விமர்சனம் செய்து பேசிய தமிழ்நாட்டுத் தலைவர் ஒருவர் தேர்தலின் பின்னர் அதற்காக வருந்தம் தெரிவித்துக்கொண்டதும் தெரிந்த விஷயமே.

தேர்தல் காலத்தில் தனிப்பட்ட முறையில் வீசப்படும் சொல்லம்புகளிலும் வசைமாரிகளிலும் நிச்சயமாக உண்மை இருப்பதில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

இந்த உண்மையை அனுபவத்தால் உணர்ந்ததின் காரணமாகவே திரு. தேசாய் 'தனிப்பட்ட முறையில் வசைமாரிபொழிவதைத் தமது கட்சி செய்யாது' என்று பெருந்தன்மையோடு அறிவித்திருக்கிறார்.

இந்த முன்மாதிரியை பொதுவாக இந்திய அரசியல் கட்சிகள் அனைத்துமே பின்பற்றவேண்டும்- குறிப்பாக தமிழ்நாட்டில் முன்னர் ஒரே குடும்பமாக இருந்து இன்று மூலைக்கொரு கட்சி அமைத்துக்கொண்டு சிதறிப்போய் நிற்கும் 'உடன்பிறப்புக்களும்'' ஏனைய தலைவர்களும் கருத்துடன் பின்பற்றுவராயின் தமிழ்நாட்டின் மதிப்பை, மேலும் உயர்த்தலாம்.

திரு. தேசாய் அவர்களின் கருத்து நமது நாட்டுக்கும் பொருத்தமானது தான்.

கடந்த தேர்தலின் போது காதால் கேட்க முடியாத விதமாக கடூரமான ... வார்த்தைகளால் மேடைகளில் சாடிக்

(9-ம் பக்கம் பார்க்க)




தமிழ் உலகின் தமிழ்ப் பேரறிஞர்களில் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களும் ஒருவர் என்று மட்டும் சொன்னால் போதாது. தமிழ்த் துறையின் பாரிய பெரும் பொறுப்புக்கள் யாவையும், தனது நெஞ்சிலும், தலையிலும் சுமந்துகொண்டு, ஓய்வொழிவின்றித் தமிழ்ப்பணி புரியும் செயல் வீரர் என்றும் சொல்லவேண்டும். இவர் எடுத்த பட்டங்களோ ஏராளம்.

1973இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் கே. கே. பிள்ளை அவர்களது தலைமையின்கீழ், ஓவியர் திரு. ச. பெனடிக்ற் அவர்கள் கலைபற்றிய ஒரு சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தியபோது, டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் நன்றி தெரிவித்துப்பேசினார். அதன் பின் இருவருக்கும் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கிடைத்தது. ஓவியர் ஒருநாள் டாக்டர் சஞ்சீவி அவர்கள் கடமைபார்க்கும் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக் காரியாலயத்திற்குச் சென்றிருந்தார். அப்போது டாக்டர் அவர்களை ''எனக்கொரு போஸ் கொடுங்கள்'' என்று கேட்டபோது, அவர் சம்மதிக்கவே ஆள்அளவு பிரமாணத்தில் தலையை மட்டும் உடனே வரைந்து காட்டினார் ஓவியர். அப்படத்தின்கீழ் ''நானேதான்'' என்று எழுதியதோடு மட்டுமல்லாது, ஈழத்து நண்பர் கலைஞர் ச. பெனடிக்ற் அவர்கள் நேரில் பார்த்து வரைந்தபடம் என்று எழுதி தனது காரியாலயத்தில் எல்லோரும் பார்க்கும்படியாக காட்சிக்காக வைத்துக்கொண்டார்.

தமிழ்த்தாய்ப்பற்றும் மோகமும் கொண்டுள்ள டாக்டர் ந. சஞ்சீவி அவர்களை சென்ற காலஇந்திரா ஆட்சியின்போது பதவியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

பீகார் இயக்கம்!

# இந்திராவின் கவலையைத் தூண்டிய பீகார் இயக்கமும் ஜெ.பி.யும்

சுதந்திரப் போராட்டத்தின் இறுதியில் சுதந்திரம் வந்தபோது அதன்கூடவே சில பலவீனங்களும் முளைத்தன, மக்கள் மனப்பான்மை பற்றி.

அந்தப் பலவீனங்களை நீக்குவதற்குப் பதிலாக, அந்தப் பலவீனங்களை ''திருப்தி செய்விக்க'' முயன்ரோம் ஒரு 10 ஆண்டுக்காலம். அதன் விளைவாக சீரழிவு ஒரு நிச்சயமான உருவத்தில் திட்டம் போட்டு வளர்த்தது போல வளர்ந்தது. அதன் விளைவினை 1965லிருந்தே அனுபவித்து வருகிறோம். இதனால் என் மனதில் கி. பி. 2000ஐப் பற்றி மனச்சோர்வு அதிகரித்தது. விமோசனம் இருப்பதாகவே தோன்றாத நிலைமையில் ''மக்களிடையே ஒரு புதிய சக்தியை'' எழுப்புவது அவசியம். அந்த வேலையை ஜே. பி. செய்து வருவதாக எனக்குத் தோன்றுகிறது. நான் ஜோஸியம் சொல்ல முடியாது. ஆனால் கடவுளை வேண்டிக் கொள்ளலாமல்லவா? மறம் மறைந்திடட்டும்; அறம் வளரட்டும். அதற்கு என் எழுத்துப்பயன்படாவிடில் நான் எழுதினது வாசகர்களின் மனதிலிருந்து மறையட்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

— ஏ. என். சிவராமன்

''ஜெ. பி.'' (ஜெயப்பிரகாஷ் நாராயண்) இயக்கம் பற்றி தென்னிந்தியாவில் பலர் மனதில் தப்பெண்ணங்கள் இன்னும் இருந்து வருகின்றன என்றே சொல்லலாம்.

[பொதுஜன இயக்கம் என்றாலே சிலருக்குப் பிடிக்காது; 1942-ல் நடந்த இயக்கம்கூட தவறு என்று நினைத்தவர்கள் இந்த நாட்டில் உண்டு. மண்டபங்களில் கூட்டம் போட்டு ஆங்கிலத்தில் பேசியே பிரச்னைகளுக்கு முடிவுகாண வேண்டும் என்று நினைக்கும் மனப்பான்மையும் இந்நாட்டில் உண்டு. இங்கு நான் குறிப்பது அவர்களைப் பற்றியல்ல.]

செய்திகள் மிகவும் 'சுருக்கமாக' வருவதால் எதிர்காலம் பற்றி 'ஜெ. பி.' வெளியிடும் கருத்துக்கள் அவர் அளித்துள்ள விளக்கங்களுடன் பிரசுரமாகாததால் அவை பலருக்குப் புரியாமலே இருந்துவருகின்றன. இயக்கத்தின்மூலம் அடைய விரும்பும் குறிக்கோளானது காந்திய சர்வோதய இயக்கத்தின் மற்றொரு கட்டமேயாகும் என்று சொல்லப்படுவது ஏன் என்று வியப்படைவோர் சிலர் ஆனால்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்ற ஒருவர் 'சட்டப்படி நிறுவப்பட்ட' ஒரு மாநில மந்திரிசபைக்கெதிராக ஒரு நேர்முக நடவடிக்கையை மேற்கொண்டு பார்லிமென்டரி ஜனநாயகத்தைக் கவிழ்க்க முயலுவாரா? 'சட்டசபையைக் கலைக்க வேண்டும்' என்று கோருவாரா? சட்டசபையின் உரிமையை பொதுக்கூட்டங்களிலா நிர்ணயிப்பது? ஆனால் யாரும் அப்பழுக்குச் சொல்லத் துணியாத தேசபக்தியுள்ள ஒருவர் இம்மாதிரிச் செய்கிறார் என்றால் அதில் ஏதேனும் ஒரு விசேஷ காரணம் இருக்க வேண்டும்!

இதன் ரகசியம் என்ன?

கிளர்ச்சியின் நோக்கம் என்ன?

அரசியலுக்கு அப்பால்நின்று காந்திஜி-வினோபா கொள்கைகள்-வேலைத் திட்டங்களின்படி 'கிராமசுயராஜ்யம்' ஏற்படுத்தும் சர்வோதய இயக்கத்தில் 20 ஆண்டு காலமாக வேலை செய்து வருபவர் 'ஜெ. பி.' அது மட்டுமல்ல!

வினோபாபாவேயின் இயக்கம் வேறெந்த மாநிலத்தையும் விட 'ஜெ. பி.' பணியாற்றும் பகுதியில்தான் கணிசமான வெற்றியை அடைந்துள்ளது. காந்தி-வினோபா கருத்துக்களை மேனாட்டுக் கல்வியில் பயிற்சி பெற்ற பேரறிஞர்கள் புரிந்து கொள்ளும்படி விளக்குவதில் ஜெ.பி.க்கு இணை ஜெ.பி.யே. பீஹாரின் பெருவெள்ளம், பஞ்சம் போன்ற துயரங்கள் நிகழ்ந்த போதெல்லாம் மக்களிடையே துயர்துடைக்கும் பணியில் 20 ஆண்டு காலமாக ஈடுபட்டிருப்பவர்.

ஆயினும் பீஹார் இயக்கத்தில் இடையிடையே பலாத்காரச்செயல்கள்பற்றியும் செய்திகள் வருகின்றனவே. பிள்ளையார் பிடிக்க குரங்காக ஆகிவிட்டால் என்ன செய்வது? மாணவர்கள் தன்னடக்கமின்றி நடந்து கொண்டால் என்ன செய்வது? என்றெல்லாம் ஐயப்பாடுகள் என் மனதிலும் தோன்றியதுண்டு.

அதேசமயத்தில்- ஜெயப்பிரகாஷ் போன்ற ஒருவர் இப்படிப்பட்ட ஓர் இயக்கத்தை நடத்துகிறார் என்றால் இதில் நான் புரிந்து கொள்ளாத ஏதோ 'மர்மம்' இருக்க வேண்டும். பீஹார் நிகழ்ச்சிகளைப் பற்றி பத்திரிகைக்குக் கிடைக்கும் செய்திகளில் ஏதோ குறைபாடு அல்லது தவறு இருக்க வேண்டும் என்று தோன்றியது. ஆகையால் சிறிது ஆராய்ந்து பார்ப்பதில் அக்கறை ஏற்பட்டது.

## இயக்கம் எப்படி ஆரம்பமாயிற்று?

ஆகையால் சென்னை வந்திருந்த ஒரு வடஇந்திய நண்பரிடம் கேட்டேன். 'ஐயா, ஜெ. பி, இயக்கத்தின் மர்மம் என்ன? அரசியலைவிட்டுஅறவே ஒதுங்கி நின்றவர் பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிடுவதுடன் நிற்காமல் ஒரு பொது ஜனக்கிளர்ச்சியை, அரசியல் கிளர்ச்சியை நடத்துவது ஏன்? என்று கேட்டேன்.

அவர் சொன்ன பதில் எனக்கு வியப்பையே ஏற்படுத்தியது. அவரது விடையைத் தருகிறேன்.

ஏ. என். சிவராமன்

(தினமணி ஆசிரியர்)

இது ஜெ. பி. தொடங்கிய இயக்கமல்ல' 'அரசியல்கட்சி இயக்கம்' அல்ல; பீஹார் மாணவர்கள் தொடங்கின இயக்கம். கட்சிச் சார்பற்ற மாணவர் இயக்கமே. குஜராத் இயக்கம்போல, 'ஹாஸ்டல் கட்டணம். வேலை வாய்ப்பு' முதலிய கோரிக்கைகள் மட்டுமல்லாமல் விலைவாசி, கள்ளமார்க்கெட், கொள்ளைலாபம், பதுக்கல் முக்கியமாக அரசு நிர்வாகத்திலும், வேறுபல துறைகளிலும் புகுந்துள்ள 'கரப்ஷன்' (ஊழல்) முதலியவற்றை எதிர்ப்பதும் இந்த இயக்கத்தின் குறிக்கோளாக சேர்க்கப்பட்டது. மாணவர் இயக்கத்தை ஒடுக்குவதற்கு பீஹார் சர்க்கார் பிரமாதமான சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இயக்கத்துக்குப் 'போட்டியாக' இருப்பது போல வேஷம் போட்டு மனக்குழப்பம் ஏற்படுத்தி இயக்கத்தை ஒடுக்க கம்யூனிஸ்டுகள் முயன்றனர். ஜெயப்பிரகாஷ்பற்றி காங்கிரஸ்காரர் சொல்லும் அவதூறுகள் கம்யூனிஸ்டுகள் கிளப்பிய கோஷங்களின் பல்லவியே.

மார்ச் 18-ம் திகதியன்று பீஹாரின் தலைநகரமான பாட்னா நகரில் மாணவர் இயக்கத்திற்கு ஓரளவு ஆதரவு அளித்து வந்த ஒரு பெரிய முக்கியமான பத்திரிகை க்காரியாலயம் கொளுத்தப்பட்டது. பல வீடுகள், கடைகள் எரிந்தன. கேள்வி கேட்பாரில்லை. சர்க்கார் என்று ஒன்று பாட்னாவில் இருந்ததா என்பதே தெரியவில்லை.

இவ்வளவும் நடந்தபிறகு ஒரு கட்டத்தில் மாணவர்கள் 'ஜெ. பி.'யை அணுகினர். முதலில் 'ஜெ. பி. தலைமை ஏற்க மறுத்தார். ஆனால் மாணவர்களின் திட்டத்தில் 'கள்ளமார்க்கெட் ஒழிப்பு. அரசியலில் கரப்ஷன் (ஊழல்) லஞ்சஒழிப்பு' முதலிய அம்சங்கள் இருந்ததால் அவ்வப்போது யோசனை கூறி வழிகாட்ட (Guide செய்ய) (மார்கதர்சன் என்பது ஹிந்திச் சொல்) மட்டும் ஒப்புக்கொண்டார். இது 1974மார்ச் 19ம் திகதி மாணவர் போராட்டக்குழு ஆரம்பித்த 1974 பெப்ரவரி 18ம் திகதிக்கு ஒரு மாதத்துக்குப் பின்.

## இரண்டு நிபந்தனைகள்

இந்த மாணவர் போராட்டக்குழுவின் செயற்குழுவின் வேண்டுகோளுக்கு பதிலளித்த போது ஜே. பி. இரண்டு நிபந்தனைகளைப் போட்டார்.

(1) மாணவர் போராட்டம் முற்றிலும் அமைதியாக (பலாத்காரத்தில் ஈடுபடாததாக) நடைபெற வேண்டும்.

(2) இந்த இயக்கம் எந்த அரசியல் கட்சியின் உறுப்பாகவும் நடப்பதாக இருக்கக்கூடாது. எந்த அரசியல் கட்சியின் தலைமையையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

'இந்த இரண்டு நிபந்தனைகளையும் மாணவர்கள் ஏற்றுக் கொண்டால் உங்களதுகோரிக்கையை நான் ஆதரிக்கத் தயார்.'

இதுதான் ஜெ. பி. கூறியது.

அதாவது இயக்கத்தை ஆரம்பித்தது ஜெ. பி. அல்ல: மாணவர்கள்.

## 'பலாத்காரப் போக்கை தடுத்தவர் ஜெ. பி.

ஆரம்பித்தது மாணவர்கள்; போராட்டக்குழு அமைக்கப்பட்டு கோரிக்கைகள் உருவாக்கப்பட்ட பெப்ரவரி 16-17-18 தேதிகளில் ஜெ. பி. பாட்னாவிலேயே இல்லை. டில்லியில் ஆஸ்பத்திரியில் இருந்தார்.

தலைமைப் பேச்சுக் கிளம்பியது மார்ச் மாதத்தில்தான். ஆகையால் இதை ஆரம்பித்தவர் ஜெ. பி. அல்ல.

ஜெ. பி. இந்த இயக்கத்திற்குத் தலைமைவகித்திராவிட்டால் பீஹார் மாணவர் இயக்கம் பலாத்கார இயக்கமாகவே ஆகியிருக்கும். பலாத்காரம் உருவாகாமல் தடுத்தவர் ஜெ. பி.'' என்று உமாசங்கர் தீட்சிதர் கூறியுள்ளார்.

## தலைப்புப் பற்றி

இந்திரா காந்தியின் ''கவலையை''த் தூண்டியுள்ள என்ற சொற்றொடர்த் தலைப்பில் இருப்பது பற்றி யாரும் தப்பெண்ணம் கொள்ளவேண்டாம்.

அவர் விளம்பரப்படுத்திய 'கவலை' என்ன? ''ஜெ. பி. பார்லிமென்டரி ஜனநாயகத்தின் அடிப்படையைச் சிதைக்கிறாரே!'' என்பதுதான் அவர் கிளப்பின ''கவலை'' இந்தக் கவலையின் அடிப்படையில் இந்திரா காங்கிரஸின் தலைவர் ''ஜனநாயகப் பாதுகாப்பு இயக்கம்'' நடத்தவிரும்புகிறார்! (கம்யூனிஸ்ட் உதவியுடன்).

தலைப்பில் ''கவலையைத் தூண்டின'' என்ற சொற்றொடரை ஜெ. பி.யின் இயக்கத்தின் வெற்றிக்கு அறிகுறியாக நான் குறிக்கவில்லை. இந்திரா கிளப்பும் பிரச்னை என்ன என்பதையே இந்தத் தலைப்புக் குறிக்கிறது.



## ஜெ. பி.யின் நிலை என்ன?

''மந்திரிசபைக் கலைப்பு'' ''சட்டசபைக் கலைப்பு'' இந்த இரண்டும் இப்போது மாணவர் இயக்கத்தின் ''கோரிக்கைகளில்'' காணப்படுகின்றன என்பது உண்மையே. ஆனால் பிரச்னை இதற்கு அப்பாற்பட்டதாகும். இந்தக் கோரிக்கைகளைப் பற்றி ஜெ. பி. என்ன சொல்லியுள்ளார் என்பதைப் பார்த்தால் இது புலனாகும். இந்தச் சர்ச்சையில் தேதிகள் மிகவும் முக்கியம். இப்போது நான் குறிப்பிடுவது 30-3-74ல் ஜெ. பி. வெளியிட்ட ஒரு அறிக்கை.

''இந்த மந்திரிசபையை நீக்கவேண்டுமென்பதிலோ சட்டசபையைக் கலைக்க வேண்டுமென்பதிலோ எனக்கு ருசி (அக்கறை) இல்லை. இந்தக் கோரிக்கை பூர்த்தியானாலும் ''இயக்கம்'' தொடரத்தான் செய்யும் (இந்த மந்திரிசபை போய் வேறு மந்திரிசபை வந்தாலும், இந்தச் சட்டசபை போய் வேறு சட்டசபை வந்தாலும், அதனால் மக்களுக்கு நன்மை ஏற்பட்டு விடப்போவதில்லை). ''நாகநாதன் போனான். ஸர்ப்பநாதன் வந்தான்'' என்பது போலத்தான் ஆகும். (தலைவலி போய்த் திருகுவலி வந்தது என்ற பழமொழிக்குச் சமமான ஹிந்திப் பழமொழி இது.)

முக்கியமான உடனடிப் பிரச்னைகள்: (1) லஞ்ச ஊழல் ஒழிப்பு, பிரஷ்டாச்சாரத்தை ஒழிப்பது, (2) கள்ள மார்க்கட் ஒழிப்பு, (3) கொள்ளை லாப ஒழிப்பு, (4) பதுக்கல் ஒழிப்பு இவையே. [இந்த 4 தீமைகளுக்கும் அடிப்படையில் உள்ளது தேர்தல் முறையில் உள்ள குறைபாடென்றும் அவர் கருதுகிறார்]. (5) அத்துடன் (அ) கல்விமுறைச் சீர்திருத்தம், (ஆ) ஜனநாயகமானது ஏட்டளவில் நிற்காமல் காரியாம்சத்தில் மக்கள் 'பங்கு கொள்ளக்கூடிய' உண்மையான 'மக்கள் ஆட்சியாக' அமையவேண்டும் என்பதுமே தமது போராட்டத்தின் நோக்கம்என்று அவர் கூறியுள்ளார். [தமிழ்நாட்டில் உள்ளவர்கள் ஜெ. பி.யின் இயக்கத்தைப் பற்றிச் சிலர் புரிந்துகொள்ளுவது சிறிது சிரமமாக இருப்பதற்குக் காரணம் ஊழல் பற்றிய நிலைமை மற்றப் பல மாநிலங்களின் அளவுக்கு இங்கு கெட்டுப்போகவில்லை என்று சிலர் நினைப்பதே.

## நிலைமையைக் குழப்பக் கம்யூனிஸ்ட் மாணவர்

மேலே சொன்னது நான் சந்தித்த நண்பருடன் நடந்த சம்பாஷணையின் சுருக்கம்.

அவர் மற்றொன்றும் சொன்னார்; ''கபூர் (பீஹார் முதலமைச்சர்) பதவி விலகவேண்டும்'' என்ற கோஷத்தை முதன்முதலில் கிளப்பியது கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள மாணவர் இளைஞர் ராலி (அணி), (சாத்ர நௌஜவான் மோர்ச்சா) என்ற கம்யூனிஸ்ட் மாணவர் அமைப்பும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் (வலதுகம்யூனிஸ்ட்) பீஹார் மாநிலப் பிரிவுமே! கம்யூனிஸ்ட்கட்சி மார்ச் 17ல் நிறைவேற்றிய இந்தத் தீர்மானம் 1974 மார்ச் 18ல் பாட்னா பத்திரிகைகளில் பிரசுரமாயிற்று.

இது பிரசுரமான அன்றுதான் இப்போது ஜெ. பி. இயக்கமாக இருந்து வரும் மாணவர் போராட்டக் குழுவின் இயக்கத்திடம் ஓரளவு அனுதாபம் காட்டின. பாட்னா 'ஸர்ச்லைட்' பத்திரிகைக் காரியாலயத்திற்குத் தீ வைக்கப்பட்டது. (16ல் ஒரு கம்யூனிஸ்ட் ஊர்வலத்தின் போது, இந்தக் காரியாலயத்தின் மீது கல்லெறி நடந்தது.)

(6-ம் பக்கம் பார்க்க)



# பேரவையில் தந்தை செல்வா நிகழ்த்திய கடைசி உரை!

தேசிய அரசுப் பேரவை அமர்வுகளின் போது கிரமமாக—தவறாது பங்குபற்றுவர்; அதில் மிகுந்தஅக்கறை கொண்டவர் தந்தை செல்வநாயகம். உரிய நேரத்தே பிந்தாமல் சென்றுவிட வேண்டும் என்பதிலும் அக்கறையுள்ளவர் அவர்.

ஒருமுறை, அவருடைய காரை மகன் எங்கோ கொண்டு சென்றுவிட்டார். பி.ப.2மணியாகிவிட்டது; கார் வந்துசேரவில்லை. அன்று பேரவை அமர்வு; பி. ப. 2 மணிக்கு. -கையில் 'பைலு'டன் காருக்காக காத்திருந்தார் தந்தை.

'கார் வந்ததும் போவோம்' என்று கூறிவிட்டு தந்தையின் காரியதரிசி ஏதோ அலுவலில் உள்ளே இருந்துவிட்டார். சிறிதுநேரம் கழிந்து விட்டபோது— தந்தையை அங்கு காணவில்லை! -திகைப்போடு சென்று பார்த்ததில், கையில் 'பைலு'டன் வீதியில் மெள்ள—மெள்ள நடந்து கொண்டிருந்தார்!

ஓடிச் சென்று நான் கேட்டபோது 'பஸ்'ஸில் போகப்போகிறேன்'. -என்று கூறினாராம்! -பேரவை அமர்வுகளில் தந்தை கொண்டிருந்த அக்கறைக்கு இது தக்கதொருசான்றாகும்.

எதிர்கட்சி 'லொபி' பக்கமுள்ள பலமான அந்தக் கதவுகளை தன்னுடைய நலிந்த கைகளால் தள்ளித் திறந்து கொண்டு பேரவையினுள் நுழைவார் தந்தை.- நுழைந்ததும், வாசலருகிலேயே நின்று சிறிதுநேரம் வலது, இடது பக்கங்களுக்குத் திரும்பி வந்திருப்பவர்கள்மீது ஒரு நோட்டம் விடுவார்.

பின்னர்- இடது கையில் 'பைலை' உடம்போடு அணைத்துக்கொண்டு, வலது கையால் ஆசனங்களைப் பிடித்தபடி படிக்கட்டுகளாக அமைந்த பேரவை மண்டபத்தினுள் ஒவ்வொரு படியாக தாண்டி -ஒவ்வொரு படிக்கட்டுகளைத் தாண்டும் போதும் அந்தந்த வரிசையில் இருப்பவர்களை இருபுறமும் திரும்பி அவதானித்தபடி முன்வரிசையில் உள்ள தனது ஆசனத்தை அடைவார்.

-சில சமயங்களில் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் மாத்திரமல்ல எக்கட்சியைச் சார்ந்தவருமே அவரைப் பிடித்துச் சென்று- அவருக்கு உதவுவார்கள்; ஆனால் இதை அவர் அவ்வளவாக விரும்புவதில்லை.

ஆசனத்தில்-அவர் அமர்ந்ததும் பேரவை சேவகர்கள் ஆசனத்தில் உள்ள இயர்போனை [Earphone] அவரது காதுகளில் இணைத்துவிட்டுச் செல்வார்கள்.- இத்தனைக்கும் 10 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிடும். -பார்வையாளர் கலரியில் அத்தனை கண்களும் இத்தனை சம்பவங்களையும் வியப்போடு- இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருக்கும்.

## உள்ளே வந்ததும்...

ஆசனத்தில் அமர்ந்ததும் அங்கு வைக்கப்பட்டுள்ள அறிக்கைகளையெல்லாம் அவதானமாக வாசிப்பார்;பேச்சுக்களை உன்னிப்பாகக் கேட்பார்.

பேரவைச் செயலாளர்களோடு தந்தை ஏதாவது பேசுவதற்காக எழுந்து அவர்களை நோக்கிச் சென்ருல், அவர்கள் தாங்களே உடனே எழுந்து சென்று அவரிடம் விடயத்தைக் கேட்பார்கள்.

## காலம் பிந்தாமல் கால்நடையாக வாகிலும் உரியநேரத்தில் சபைக்குச் செல்வதில் மிகுந்தஅக்கறையுள்ளவர்

### கடைசிப் பேச்சு

அமரர் திருச்செல்வத்தின் அனுதாபத் தீர்மானத்தின் மீது பேசிய பேச்சுத்தான் பேரவையில் தந்தையின் கடைசிப் பேச்சு.

ஆனல் பேரவையில் அவரது கடைசி அரசியல் பேச்சு கடந்த நவம்பர் 19ந் தேதி இடம் பெற்றது. இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதம் பேரவையில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அந்த விவாதத்தில் அன்று தந்தை பேசினர்.

அவர் பேசவில்லை; முழங்கினர்!

—தந்தை 'முழங்கினர்' என்று சொன்னல் பலருக்கு அது ஒரு மாதிரியாகவே இருக்கும்.

அவர் பேசுவதே கேட்காதே. அப்படியிருக்க அவர் முழங்கினர் என்ருல்...? என்று எண்ணவே தோன்றும்.

தந்தை அன்றும் மெதுவாகவேதான் பேசினர்.

ஆனல்—

அந்தப் பேச்சு அரசுக்கு ஒரு கலக்கமாக— இடியாக— முழக்கமாகத்தான் இருந்தது.

தமிழரசுக்கட்சியின் தரப்பில் கடைசி உரையை விவாதத்தின் மீதான முதலாவது வாக்கெடுப்புத் தினமான அன்று சுமார் 40 நிமிடங்களுக்கு மேலாகத் தந்தை நிகழ்த்தினர்.

தந்தை பேச எழுந்ததுமே அரசு— எதிர்க்கட்சி இருதரப்பிலும் அனைவருமே தங்கள் 'இயர்போன்'களை மாட்டிக் கொண்டு அவதானமாகக் கேட்க ஆயத்தமானர்கள்.

கைகள் இரண்டையும் இடுப்பில் வைத்தபடி சபாநாயகரை நோக்கி மிகுந்த உசாராகவே அன்று பேசினர்.

—அவருடைய நிலை— பேச்சு இரண்டுமே அன்று மிடுக்காகத்தான் இருந்தன.

இந்த நாட்டில் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த இரண்டு பிரதமர்களுடனும் தமிழர் பிரச்னை குறித்து ஒப்பந்தம் செய்தேன்; ஆனல், அவர்கள் இருவருமே பின்னர் சிங்கள மக்களுக்குப் பயந்து அவ்வொப்பந்தங்களை நிறைவேற்றவில்லை.

—இந்நிலையில் சமஷ்டி கோரிய நாம் அக்கொள்கையினைக் கைவிட்டு அடுத்த நிலை பற்றி நிதானமாக யோசித்தோம்; தனிநாடு ஒன்றுதான் எமக்குள்ள ஒரே வழி என்ற முடிபுக்கு வந்தோம்.

தனிநாடு அமைப்பதென்பது சுலபமானதொன்றல்ல என்பது எமக்குத் தெரியும்.

எனினும்—

இந்த நாட்டில் நாம் சிங்கள மக்களின் பிடியிலிருந்து விடுபடவேண்டும்; அல்லது அழிந்துபோகவேண்டும்.

—நமது மூதாதையர் புத்திசாலிகளாக இருந்தனர்: தமக்கென்று ஒரு நாட்டை அவர்கள் வைத்திருந்தனர்.

நாம் பிரிந்துபோவதை இந்த அரசாங்கம் ஏன் மறுக்கிறது என்பது தெரியவில்லை. இந்த அரசாங்கம் மறுத்தாலும் இனி வரப்போகின்ற ஒரு சிங்கள அரசாங்கம் எமது நாட்டைப் பிரித்துத் தரும்.

அயர்லாந்து நூறு வருடங்களுக்கு மேல் போராடிப் பிரிந்துசென்றது. நாம் எமது முடிபை உலக நாடுகளுக்கு அறிவித்துவிட்டோம்.

—எமது கோரிக்கைகளை அவை ஏற்றுக்கொள்ளும்.

சாத்வீகமானமுறையிலேயே போராடுவோம் இந்த நாட்டில் நாம் உரிமைபெறுவோம்; அல்லது அழிந்துபோவோம்.

—இந்தப் பின்னணியில்தான் எமது கொள்கை இருக்கின்றது.

எங்களின் எதிர்காலம் எங்கள் சிந்தனையிலேயே தங்கியிருக்கிறது.

—தந்தையின் பேச்சின் சாரம் இப்படித்தான் இருந்தது.

தந்தைக்குப் பின்னர் அக்குரணைத் தொகுதி உறுப்பினர் திரு. ஹமீடை (யூ. என். பி.) அடுத்து உப சபாநாயகர் ஜனப் ஐ. ஏ. காதர் பேசினர்.

—திரு. செல்வநாயகம் நாட்டைப் பிரிக்கும் ஓர் அறைகூவலைப் பேரவையில் விடுவித்துவிட்டபின்னர், அவரையடுத்து பேசிய அக்குரணை உறுப்பினர் அதுபற்றிக் கண்டிக்காதது கண்டிக்கப்படவேண்டியவிடயமென்றும், நாட்டைப் பிரிக்க ஒருபோதும் தாம் விடப்போவதில்லையென்று உப-சபாநாயகர் ஆவேசத்தோடு பேசினர்.

—தந்தை பேரவையில் இப்படிப் பேசிவிட்டாரென்பதை அறிந்ததும் அவருக்கு அரசாங்கம் என்ன பதிலளிக்கப் போகிறது? என்பதை அறிவதற்காகச் சகல உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும், பத்திரிகை நிருபர்கள் கலரியை அன்று மாலை ஆக்கிரமித்துக்கொண்டார்கள்

எனினும்—

அன்றுதான் யப்பான் சென்று திரும்பிய பிரதமருக்குப் பேராதனை வளாகச் சம்பவம் தொடர்பான பொலிஸ் அட்டூழியங்களுக்காக எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக அவர் பேரவையுள் பிரவேசித்ததும் எதிர்க்கட்சியினர் அனைவரும் வெளிநடப்புச் செய்தார்கள்; கிரியல்ல எம். பி. திரு. வாசுதேவ நாணயக்கார மலர் வளை

(7ம் பக்கம் பார்க்க)

# இந்திராவின் கவலையை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்யூனிஸ்ட் ''மாணவர் போராட்ட அணி''யானது கட்சிச் சார்பற்ற மாணவர் போராட்டக் குழு''வுக்கு (சாத்ர ஸங்கர்ஷ ஸமிதிக்கு) போட்டியாகக் கிளம்பின அமைப்பு.

### ஜனநாயகப் பிரச்னை

''ஜனநாயகத்துக்கு எதிரான இயக்கம்'' என்று இந்திராவும், காங்கிரஸும் கூறுவது ஒருவிதத்தில் ஒரேயொரு விதத்தில் உண்மையாக இருக்கலாம். ஜனநாயகம் பல ஊழல்களுடன் இயங்கிவரும் இப்போதைய நிலையை ஜெ. பி. எதிர்க்கிருரென்று சொல்லலாம்.

இப்போது ஜனநாயகமானது உண்மையான மக்கள் ஆட்சியாகச் செயல்படவில்லை என்று 'ஜெ. பி. கூறுகிருர். (1) வோட்டச் சமுதாயத்தில் சுமார் 35 சத விகித வோட்டைப் பெற்ற ஒரு கட்சியானது சட்டமன்றத்தில் 70 சத விகித இடங்களைப் பிடிக்க முடிகிறதென்ற தேர்தல் முறையும், (2) பொதுஜன அபிப்பிராயம் எப்படியிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் சட்டசபை உறுப்பினரும் மந்திரிகளும் பதவியில் நீடிக்கமுடியுமென்ற நிலையும், (3) தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள்மீது வாக்காளரின் கண்காணிப்புக்கு ஏற்பாடு இல்லாத ஒரு முறையும், (4) சட்டமன்ற வேட்பாளரை (உறுப்பினரை அல்ல-வேட்பாளரை) பொறுக்கும் உரிமையில் மக்களுக்கு இடமேயில்லாமல் கட்சித் தலைமையின் ஸ்தாபனம் இஷ்டம்போலத் தமக்குப் பிடித்தவரை வாக்காளர் மீது சுமத்த முடியுமென்ற நிலைமையும் மக்களின் பேரால் ஆட்சி என்ற நிலைமையை ஏற்படுத்துகிறதேயொழிய ''மக்களுக்காக''வோ ''மக்களினுடையதாகவோ'' For the People' By the People' நடப்பதாக அமையாது என்று ஜெ. பி. கருதுகிருர். இதற்கு மாற்ருக:-

(1) 'ஜெ. பி. விரும்பும் அமைப்புச் சாத்தியமா? (2) அது சரிதானு-என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

ஆனல் இதை ஜனநாயகத் தத்துவத்திற்கெதிரான இயக்கமென்று சொல்லமுடியுமா? என்பது கேள்வி

### சர்வசேவா சங்கத்தின் 4 பிரசுரங்கள்

''ஜனவரி 4ந் தேதி முதல் 7ந் தேதி வரை ஜெ. பி. மத்தியப் பிரதேசத்தில் (காளிதாசரின் ஊரான) உஜ்ஜெயின் இந்தூர், தேவாஸ் முதலிய ஊர்களில் சுற்றுப்பிரயாணம் செய்கிருர். சுற்றுப்பிரயாணத்தில் ஒரு 'பார்வையாளராக'த் தாங்கள் நிலைமையை அறிய முயலலாமே என்ருர், மேலே பிரஸ்தாபித்த வட இந்திய நண்பர். நான் போனேன்.

அந்தச் சுற்றுப்பிரயாணத்தில் நான் ஜெ. பி.யுடன் சர்ச்சை எதுவும் செய்யவில்லை. ஜெ. பி. மத்தியப் பிரதேச நகர்களில் நிகழ்த்திய உரைகளிலிருந்து நான் ஊகித்துக் கொண்டதையும், ஜெயப்பிரகாஷின் 2 ஆண்டுச் சொற்பொழிவுகளைக் கோர்த்து வாரணுசி ஸர்வ சேவா சங்கத்தினல் பிரசுரிக்கப்பட்ட 3 ஹிந்திப் புத்தகங்களிலும் (பிஹார் இயக்கத்தை ஆரம்பித்ததற்கு முன்னரே) 1972ல் அதே ஸ்தாபனத்தால் பிரசுரிக்கப்பட்ட 'என்னுடைய எண்ணங்கள் உருவான வரலாறு' (மேரி விசார யாத்திரா) என்ற ஜெ. பி.யின் புத்தகத்தில் படித்ததையும் 'கலந்து' எழுதப்படுவது இந்தக் கட்டுரைத் தொடர்.

(இன்னும் வரும்)



GRANT K & E 33

# 'அன்று நான் சொன்னதை இன்று ஏற்றுள்ளார்கள்"

**நான் சந்தித்த அரசியல் தலைவர்கள் (2)**

**கா. யோகநாதன்**
(ஈழநாடு பிரதம நிருபர்)

நல்லூரில் கடந்தமாதம் சுந்தரரைச் சந்தித்தேன். தேர்தல் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் என்னைக் கண்டதும் அன்புடன் வரவேற்றார். நான் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தார்.

பெரும்பான்மை பலம் இல்லாமல் ஆட்சிமன்றத்தில் என்ன செய்ய முடியும்? என்றேன். அவர் ஆட்சிமன்றத்தில் நடந்த ஒருசம்பவத்தை கூறினார். அரசியல் அமைப்பு கமிட்டி. உறுப்பினரால் மாற்றம்செய்வதற்கு அரசு முயற்சி எடுத்து நான் அதை தனிமனிதனாக நின்று எதிர்த்தேன் முதல்நாள் முழுவதும், அதை எதிர்த்துப்பேசினேன். எனக்கு பேசுவதற்கு உரிமையுண்டு எவரும் தடுக்க முடியாது. அடுத்தநாளும் பேசினேன் மறுநாளும் பேசினேன் கடைசியில் என் எதிர்ப்பு வெற்றிபெற்றது. அரசின் முயற்சி கைகூடவில்லை இப்படி சுந்தரர் கூறினார். ஆட்சிமன்றத்தில் தனிமனிதனாகநின்று இதனை சாதித்ததற்கு அவரது தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், துணிச்சலுமே காரணமாகும்.



"1954-ம் ஆண்டுதான்ஆட்சிமன்றத்தின் தனி நாடு கோரிக்கையை கொண்டு வந்தேன். அன்று நான் கூறியதை இன்றுதான் கூட்டணியினர் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இப்படி சுந்தரர் கூறியதும் நீங்களும் கூட்டணியிற் சேர்ந்து கொள்ளலாமே என்றேன். உடனே அவர் கூட்டணியினர் தான் என்னுடன் வந்து சேர்ந்து கொள்ளவேண்டும் என்றார்.

அடுத்ததேர்தலில் 25 இளைஞர்களை போட்டிக்கு நிறுத்தப் போவதாகவும் அவர் கூறினார். இதுவும் அவரது துணிச்சலைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

## நீதிமன்றத்தில்

நீதிமன்றங்களில் கூட அவரது துணிச்சல்தான் அவருக்கு பக்கபலமாக இருந்திருக்கிறது. மல்லாகம் நீதிமன்றத்தில் ஒரு சமயம் மாவை ஆலய வழக்கு ஒன்று நடந்து கொண்டிருந்தது சுந்தரர் மாவை குருக்களுக்காக ஆஜராக இருந்தார் வழக்கு விசாரணை ஆரம்பமானது. பிரம்மஸ்ரீ துரைச்சாமிக்குருக்கள் அழைக்கப்பட்டார். குருக்கள், நீதிமன்றவாசலில் வரவே திரு. சுந்தரலிங்கம் எழுந்து அவருக்கு மரியாதைசெய்த தோடு கோட்டிலிருந்த பார்வையாளர் பக்கம் எழுந்துநிற்குமாறு" கையைக்காட்டினார். கோட்டிலிருந்த அத்தனை பேரும் அமைதியாக எழுந்து நின்று குருக்களுக்கு மரியாதைசெய்தார்கள். நீதவான் இதனை உன்னிப்பாக அவதானித்தார். குருக்களுக்கு ஆசனம் வழங்கப்பட்டு அவர் அதில் இருந்தபின்னரே சுந்தரரும் மற்றும் பார்வையாளர்களும் அமர்ந்தார்கள் இதுவும் அவரது துணிச்சலைத் தான் காட்டுகிறது.

நீதிமன்றங்களில் அநேக வழக்குகளில் அவர் ஆஜராகியிருக்கிறார். நீதிமன்றங்களுக்கு செல்லும் போது அவர் தமிழ் தேசிய உடையிலேயே செல்வது வழக்கம் நீதிமன்றங்களில் மட்டுமல்ல பொது இடங்களில் கூட அவரை தமிழ் தேசிய உடையில் தான் காணலாம். நீதிமன்றங்களில் அவர் கொள்கைக்காக பலவழக்குகளில் இலவசமாக வாதாடியிருக்கிறார்.

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் மாவை கந்தசாமி கோவில் தொடர்பான வழக்கொன்று நடந்தது. அதில் சுந்தரர்தான் எதிரிகளில் ஒருவராக இருந்தார் வழக்குவிசாரணையைப் பார்க்க சுந்தரரின் ஆதரவாளர் பெருந்திரளாக வந்திருந்தனர் சுந்தரர் ஒரு ஏ40 காரில் கோட்டுக்குவந்திருந்தார். கோட்டில் அன்று சிறுபான்மைத் தமிழர் ஒருவர் சாட்சியமளித்தார் தமக்குத்தாமே ஆஜரான சுந்தரர் அவரை குறுக்கு விசாரணை செய்தார். அச்சிறுபான்மைத்தமிழர் தாம் ஏற்கனவே பலதடவை மாவிட்டபுரம் கோவிலுக்குள்சென்றதாக சாட்சியமளித்தார். இதுபற்றி சுந்தரர் குறுக்கு விசாரணைசெய்தார் நீண்டநேரம் பல கேள்விகளைக் கேட்டார், விசாரணை பின் ஒத்திப்போடப்பட்டது.

வழியில் சுந்தரரை தாக்க ஒரு கோஷ்டி காத்திருப்பதாக ஒருதகவல் கிடைத்தது கைக்குண்டு விசப்படலாம் என்றும் கூறப்பட்டது. ஆதலால் பொலிஸ்பாதுகாப்புடன் தான் சுந்தரர் கிரிமலைக்குச்செல்ல வேண்டும் என ஆதரவாளர் விரும்பினார்கள் இதுபற்றி அவர்கள் சுந்தரரிடம்சொன்னபோது அவர் சிரித்துவிட்டு கைக்குண்டு என்னை ஒன்றும் செய்யாது. என்று கூறிவிட்டு தான் வந்த காரில் ஏறிச்சென்றுவிட்டார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் காணி வழக்கு ஒன்று நடந்தது. அவ்வழக்கில், எதிரி பக்கம், அடங்காத் தமிழர் சுந்தரலிங்கம் ஆஜராகியிருந்தார். அன்று விசாரணை நடைபெறுவதற்கு முக்கிய சாட்சிஒருவர் சமூகமளிக்கவில்லை. அதனால் விசாரணை ஒத்திப்போடப்பட்டது. நீதவான் இருபக்க சட்டத்தரணிகளுக்கு வசதியான ஒரு தேதியை குறிப்பிடுமாறு தெரிவித்தார்.

அச்சமயத்தில்தான் 70ம் ஆண்டு தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வாக்களிப்பிற்கு இன்னும் 2 வாரம் இருந்தது. திரு. சி. சுந்தரலிங்கம் காங்கேசன்துறையில் போட்டியிட்டார். தேர்தல் வேலைகளுக்கிடையே, இந்த வழக்கில் ஆஜராகி, திரு. சுந்தரலிங்கம் கோட்டிற்கு வந்திருந்தார்.

அடுத்த தவணை பற்றி நீதவான் கூறியதும், திரு. சுந்தரலிங்கம், தமது டயரியை எடுத்து புரட்டிக் கொண்டிருந்தார். எதிர்பக்க சட்டத்தரணி ஒரு திகதியை குறிப்பிட்டு நீதிபதியிடம் கூறினார்.

உடனே திரு. சுந்தரலிங்கம் அதற்கு தனக்கு வசதியில்லையென்றும், அன்றைய தினம் தான் பாராளுமன்றத்தில் இருக்கவேண்டும் என்று கூறினார். கோட்டில் ஒரே சிரிப்பாக இருந்தது. ஆனால் திரு. சுந்தரலிங்கம், அதை சீரியசாகவே எடுத்தார். பின் வேறு ஒரு திகதி தெரிவிக்கப்பட்ட போதும், அன்றும் தான் பாராளுமன்றத்திற்கு செல்ல வேண்டுமென திரு. சுந்தரலிங்கம் கூறினார், கடைசியில் இரு பக்கத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தேதிக்கு நீதவான், வழக்கை ஒத்திவைத்தார்.

1958ம் ஆண்டு வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சி மாநாட்டிற்கு, நாலாபக்கங்களிலும் ஏராளமான மக்கள் வவுனியாவில் திரண்டிருந்தனர். பரபரப்பான சூழ்நிலையில் வவுனியாவில் தமிழரசு மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அன்றைய தினமே தென்னிலங்கையில் சில இடங்களில் வகுப்பு கலவரம் ஆரம்பித்திருந்தது. இதனால் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டிருந்த வவுனியாவில் மாநாடு முடிந்து ஆயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணம் செல்லமுடியாமல், வவுனியாவில் தவித்துக் கொண்டிருந்தனர். வவுனியா புகையிரத நிலையத்திலும் பெருந்திரளானோர் காத்திருந்தனர். எந்தரயிலும் வருவதற்கான அறிகுறி இல்லை.

அப்போது திரு. சுந்தரலிங்கம்தான் வவுனியா எம். பி. யாக இருந்தார் காலை 8 மணிக்கு காரில் புகையிரத நிலையத்திற்கு வந்தார். தென்னிலங்கையில் நடப்பதை யெல்லாம் எப்படியோ அவர் அறிந்திருந்தார். அதனால் எப்படியும், அங்கு திரண்டுநின்ற மக்களை, அவர்கள் ஊருக்கு அனுப்பிவிடவேண்டும் என விரும்பினார். உடனடியாக, தொலைபேசி மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார். இறுதி நேரத்தில் அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு ரயில் ஒழுங்கு செய்யப்பட்டது. சிலமணி நேரத்தில் ரயில் வந்து சேர்ந்

(9-ம் பக்கம் பார்க்க)

**கலையுலகத் தொடர்புகள்— 23**

# இலங்கை நடிகையை வைத்துப் படம் எடுக்க விரும்பினர் எஸ். எஸ். ஆர்.!

**எஸ். பி. மயில்வாகனன்**

பல நடிகர் நடிகைகள் இலங்கைக்கு விஜயம் செய்ததைக்கண்ட எஸ்.எஸ்.ஆருக்கு தானும் விஜயகுமாரியும் இலங்கைக்கு விஜயஞ்செய்யவேண்டுமென்ற ஆசை ஏற்பட்டுவிட்டது. இதை பலரிடமும் வெளியிட்டிருந்தார். எப்படியோ அவர் ஆசையை நிறைவேற்றி வைக்க முன்வந்தார் ஒரு நண்பர். எஸ். எஸ். ஆரும் விஜயகுமாரியும் இலங்கைக்கு விஜயம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. இதை நான் சென்னைக்கு ஒருமுறை விஜயம் செய்தபொழுது ஏ.வி.எம் ஸ்ருடியோவில் எஸ். எஸ், ஆரும், விஜயகுமாரியும் சந்தித்து என்னிடம் கூறினார்கள். இருவரும் ஏ வி எம் படமொன்றில் அப்பொழுது நடித்துக் கொண்டிருந்தனர்.

அந்தப் படப்பிடிப்பு முடிந்ததும் இலங்கைக்கு வருவதாகவும் வருமுன் எனக்கு அறிவிப்பதாகவும் தெரிவித்தார் எஸ் எஸ் ஆர். அதைப் போலவே வருமுன்எனக்குத்தந்திஅடித்திருந்தார் எஸ் எஸ் ஆர். அதன்படி நானும் இரத்மலானை விமானநிலையத்தில் இருவரையும் சந்தித்தேன். நான்விமான நிலையத்தில் இவர்களைச்சந்திக்கப் போயிருந்தபொழுது எஸ் எஸ் ஆர்-விஜயகுமாரியை இலங்கைக்கு அழைத்திருந்தவர் என்னருகே வந்து எங்கே இந்தப் பக்கம் என்றார். எஸ் எஸ் ஆர்-விஜயகுமாரியை சந்திக்க வந்திருக்கிறேன் என்றேன். அவர் நானும் கூட்டத்தோடு கூட்டமாக அழைப்பின்றி வந்திருப்பதாக நினைத்து "நான் உங்களுக்கு அறிவிக்கவில்லையே" என்றார். நீங்கள் அறிவிக்காவிட்டாலென்ன எஸ் எஸ் ஆர் எனக்கு அறிவித்திருக்கிறார் என்றுஅவர் அனுப்பியிருந்த தந்தியைகாட்டினேன். அவர் அதை எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் அவர் திட்டப்படி என்னை எஸ் எஸ் ஆர் விஜயகுமாரி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அழைப்பதில்லை என்பதாகும்.

இந்தத்தந்தியைக்கண்டதும் அவர் தனது திட்டத்தை மாற்றிக் கொண்டார். எஸ் எஸ் ஆர்-விஜயகுமாரி காலிமுகத்திடலில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தார்கள். எனக்கு சந்தர்ப்பம்கிடைக்கும் பொழுதெல்லாம் அவர்களை ஹோட்டலில் சந்தித்துவந்தேன்.

எஸ் எஸ் ஆர் நடாத்திய வில்லுப்பாட்டு நிகழ்ச்சி சுகததாச விளையாட்டரங்கில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எஸ் எஸ் ஆரின் வில்லுப்பாட்டைக் கேட்பதைவிட விஜயகுமாரியைபார்க்கவந்தவர்களின் கூட்டம்தான் அதிகம். வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் விஜயகுமாரியும் கலந்துகொள்வாரா என்ற கேள்விக்குப்பதில்கூறும் விதமாக விஜயகுமாரியும் எஸ் எஸ் ஆருடன் மேடையில் போய் அமர்ந்துகொண்டார்.

மேடையில் மட்டுமிருந்தால் போதுமா நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளவேண்டுமே. அப்பொழுது தானே நிகழ்ச்சியும் கலகலப்பாக இருக்கும் என்றார்கள் அழைத்தவர்கள். அதை மனதில் கொண்டு எஸ் எஸ் ஆர் விஜயகுமாரி கண்ணகி மதுரையை அழித்தகாட்சியை வில்லுப்பாட்டாகவும் வசனமாகவும் நடாத்தினார்கள். இது போதாதாரசிகர்களுக்கு. எதிர்பார்த்த அளவு ஜனம் இல்லாவிட்டாலும்கூடியிருந்த ரசிகர்களுக்குப்பரமதிருப்தி.

### ராஜபள்ளி அளித்த விருந்து

அடுத்தநாள் எஸ் எஸ் ஆர்-விஜயகுமாரி என் வீட்டிற்கு வந்து காலை உணவு அருந்தினார். அன்றுமாலை சிலோன் ஸ்ருடியோவில் காலஞ்சென்ற படத்தயாரிப்பாளர் ராஜபள்ளி ஒரு விருந்துபசாரம் அளித்தார். அன்று அவர் அழைப்பின் பேரில் பல சிங்கள நடிகர் நடிகைகளும் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரையும் திரு. ராஜபள்ளி அறிமுகம் செய்து வைத்தார். தனது படத்திலிருந்து சில பகுதிகளையும் போட்டுக்காட்டினார். அன்று நடைபெற்ற ஒரு படப்பிடிப்பையும் கண்டுகளித்தார்கள்.

திரு. ராஜபள்ளி இந்தவிருந்துபசாரத்தை ஒழுங்கு செய்திருந்தது தனது நடிகைகளில் ஒருவருக்கு தமிழ்ப் படத்தில் சந்தர்ப்பம் எடுத்துக்கொடுப்பதற்காக. எஸ் எஸ் ஆர் உதவியோடு எப்படியும் அந்த நடிகையை தமிழ்ப்படத்தில் நடிக்கச்செய்து விடலாமெனத் தான் எதிர்பார்த்தார். அந்த நடிகையோ, ஒரு காலத்தில் சிங்களப் படங்களில் கொடிகட்டிப் பறந்தவர். ஆனால் வயது போய்க் கொண்டிருந்தது. சிங்களப் படங்களிலும் சந்தர்ப்பம் குறைந்து வந்து கொண்டிருந்தது. திரு. ராஜபள்ளியின் படங்களில்மட்டுமே நடித்துவந்தார். அதனால் இப்படி ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து அந்த நடிகை தமிழ்ப் படங்களில் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால் தன் பொறுப்பும் குறைந்துவிடுமென எதிர்பார்த்தார். ஆனால் எஸ் எஸ் ஆர் அந்த நடிகையை விட்டுவிட்டு வேறு அந்தக் காலத்தில் [illegible] னேறி வந்து கொண்டிருந்த சந்தியாகுமாரியை தனது படத்தில் நடிக்க வைக்க [illegible] ணினார். சந்தியாகுமாரியை எஸ் எஸ் ஆர் திரு. குணரத்தினம் அளித்த ஒரு இரவு விருந்துஉபசாரத்தின் போது சந்தித்தார். அன்றைய விருந்திலும் பல சிங்கள நடிகர்நடிகைகள் வந்திருந்தார்கள். அதில் முக்கியமாக காமினி பொன்சேகா, சந்தியாகுமாரி ஆகியோரைக் குறிப்பிடவேண்டும். அன்று சந்தியாகுமாரியைப் பார்த்தபின் அவரை எப்படியும் தன்னோடு நடிக்க வைக்கவேண்டுமெனத் திட்டம் போட்டுவிட்டார் எஸ் எஸ் ஆர். அதை செயல்படுத்தவும் ஆரம்பித்துவிட்டார்.

சென்னை திரும்பியதும் ஒரு நாள் எனக்கு வீட்டுக்கு டெலிபோன் செய்துதன்திட்டத்தை வெளியிட்டுசந்தியாகுமாரியை சந்தித்து அவர் விருப்பத்தைக் கேட்கும்படி சொன்னார். தான் அடுத்தநாள் டெலிபோன் செய்வதாகவும் எப்படியாவது சந்தியாகுமாரியின் சம்மதத்தைப் பெறும்படி கூறினார். நான் அவர் விருப்பப்படி சந்தியாகுமாரி வீட்டிற்குப் போய் எஸ் எஸ் ஆர் போட்டுள்ள திட்டத்தை விபரித்துச் சொன்னேன். இதனால்சந்தியாகுமாரிக்கும் தமிழ்படத்தில் நடிக்கும் சந்தர்ப்பமும்கிடைக்குமென்று எடுத்துக்கூறினேன். ஆனால், சந்தியாகுமாரியின் தகப்பனார் நல்ல அனுபவசாலி. ஒரே அடியாகஅவர்சம்மதிக்க மறுத்துவிட்டார். எஸ் எஸ் ஆர் சொன்னதுபோல் அடுத்த நாள் எனக்கு டெலிபோன் செய்தார். இம்முறை டெலிபோன் எனது ஆபீசுக்கு வந்தது 15 நிமிடமாகவே பேசினார். சந்தியாகுமாரி தனதுபடத்தில் நடிக்கவிரும்பாததை மிக மனவருத்தத்துடன் ஏற்றுக்கொண்டு மீண்டும் முயன்று பார்க்கும்படி என்னைக்கேட்டுக் கொண்டார். எஸ் எஸ் ஆர் விஜயகுமாரி இலங்கைக்கு

(9-ம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கும் ஓடியது. அவன் பணம் கரைந்துகொண்டு வந்தது. எம். பி. கேட்டார் ''இந்த வேலை அவ்வளவு மரியாதையானதாக இல்லை. வேறு வேலை வந்தால் பாப்பமா?''

அவனுக்கு இதற்குமேல் ஒன்றும் கதைக்கமுடியவில்லை. வாயினுள் ஏதோ ஒன்றுவந்து அடைத்துக்கொண்டது.

அவனிடம் மிகுதிப் பணம் ஐம்பத்தெட்டு ரூபா இருந்தது. ஒரு வீடு வளவை விற்ற பணம் இது. புகையிரதத்துக்குப் பதினெட்டுப் போய் விட்டால் மிகுதி நாற்பது இந்தப் பணத்துடன் தெருப்பக்கம் போனான். அங்கே பலவித விளையாட்டுப் பொருட்கள் முதலியன விலைப் பட்டியலுடன் குறிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றாக உற்றுநோக்கிவந்த அவன் பார்வை மண்வெட்டியில் ஒரு கணம் நிலைத்துக்கொண்டது. மண்வெட்டியென்றாலும் மண்வெட்டிதான் அது. முதலை மார்க். அந்த மண்வெட்டியையும் பார்த்து கையிலே இருந்த பணத்தையும் பார்த்தான். இரண்டும் சரியாகவே இருந்தது.

அப்போது அவன் தங்கியிருந்த 'ஹோட்டல் பியோன் ஒரு தந்தியைக் கொண்டு அவனிடம் நீட்டினான். ''வேலன் காலமாகிவிட்டார். அவசரம் வரவும்'' என்று பக்கத்து வீட்டுக்காரர் அடித்திருந்தனர்.

''அப்பா'' என்று அழுதபடி மண்வெட்டியைப் பிடித்தான் அவன்.

[யாவும் கற்பனை]

---

### தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்—14

# “பெத்லேகம் குறவஞ்சி நாடகம் எழுதினர்!

**வண. எம். ஏ. இரத்தினராஜா**

தமிழ்நாடு அளித்த இன்னோர் தமிழ்க் கிறிஸ்தவர், வேதநாயகம் சாஸ்திரியார் என்ற புகழ்பெற்ற கவிஞராவர். இவர் திருநெல்வேலியிலே பிறந்தவர். இளம் வயதிலேயே தம் தாயை இழந்தார். இளைஞனாக இருந்த வேதநாயகத்தை சுவாட்ஸ் என்ற ஐரோப்பிய மிஷனரி சந்தித்தார். விளையும் பயிரை முளையிலேயே கண்ட சுவாட்ஸ், வேதநாயகத்தை தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்று அங்குள்ள தம் பாடசாலையிலே சேர்த்து, அவரைத் தம்மோடேயே வைத்துக் கொண்டார். சுவாட்ஸ் மிஷனரியின் அரிய நண்பனாக இருந்தவன் தஞ்சையை ஆண்ட சிற்றரசன் துளசி மன்னன். துளசி இறந்தபோது, தன் மகன் சரபோஜி இளவரசனை, சுவாட்ஸ் உடைய பராமரிப்பிலேயே மன்னன் விட்டுச் சென்றான். சரபோஜியையும் வேதநாயகத்தையும் தன் சொந்த மக்கள்போல் போற்றிப்பராமரித்தார் சுவாட்ஸ்.

தரங்கம்பாடிக் கல்லூரியிலே, மாணவனாகச் சேர்க்கப்பட்டார் வேதநாயகம். கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அங்கிருந்த கலாசாலை யொன்றில் தலைமையாசிரியராக அவர் நியமனம் பெற்றார். இக்காலத்தில் தமிழ்மொழியில் இவருக்கு இயற்கையாகவே இருந்த ஆர்வம் மிளிரத் தொடங்கியது. அவரிடமிருந்த கவித்திறன் வெளிவீசியது. அநேககிறிஸ்தவ நூல்களை ஆக்கினார் வேதநாயகம். அவற்றுள் பராபரன்மாலை, ஞானக்கும்மி, ஆதியானந்தம் முதலிய நூல்கள் மிகப் பிரசித்திபெற்றவை. பராபரன்மாலை என்பது ஓர் இனிய தமிழ்நூல் பரம் பொருளாகிய இறைவனது கருணையையும் பெருமையையும் உருக்கமாக எடுத்துரைப்பது அந்நூல். இறைவனே! உன்னை நான் அடைவதற்கு, வேத நெறியுண்டு; நேசிக்க நெஞ்சுண்டு; நினைக்க மனமுண்டு; மாசெல்லாம் தீர்ப்பதற்கு இயேசு பெருமான் அருளுண்டு; தாயிருக்கச் சேய் தவிப்பதுண்டோ'' என்ற கருத்தடங்கிய அவர் பாட்டில், பக்தியும் உருக்கமும் பரந்துநிற்க நாம் காணலாம்.

''நீயிருக்க வேதநெறியிருக்க
நெஞ்சமுற
வாயிருக்க நின்பதத்தில் வந்
திருந்த என் மனமும்
போயிருக்க நின்புதல்வன்
புண்ணியனர் அன்பிருக்கத்
தாயிருக்கச் சேய்க்குத் தவிப்
பேன் பராபரனே''

என்று பாடினர் வேதநாயகர்.

இத்தகைய பராபரன் உலகைப் படைத்த பான்மையை வியந்து பாடிய வேதநாயகம், இத்தகைய பராபரன் உலகைப் படைத்த பான்மையை வியந்து பாடிய வேதநாயகம் ''ஞானத்தச்சன் நாடகம்'' என்னும் நூலிலே அதைப் பாடிப் போற்றுகிறார்.

''ஞாலத்திலே அதி காலத்
திலே-மிகு
ஞானத்திலே நன்னிதா
னத்திலே கொண்டு
சாலத்தமக்குத் தேவாலய
மாகவே
தம்முடைச் சாயலாய்த்
தம்முடை ரூபமாய்
வீடு கட்டினனே ஞானத்தச்
சன்
வீடு கட்டினனே''

என்னும் பாடலைப் போன்ற நூற்றுக்கணக்கான பாடல்கள் அந்நூலில் உள.

குறவஞ்சி நாடகங்களைக் கற்ற வேதநாயகர் தாமும் கிறிஸ்தவ குறவஞ்சி நாடகங்கள் ஆக்க முற்பட்டார். ஆண்டவராகிய இயேசுவைப் பாட்டுடைத் தலைவராக வைத்துப் ''பெத்தலேம் குறவஞ்சி'' என்னும் பெயரால் ஓர் அரிய நாடகம் ஆக்கினர். சீர்யேசு நாதனுக்கு ஜெயமங்களம்–ஆதி திரியேக நாதனுக்கு சுபமங்களம்'' என்பது அக் குறவஞ்சியின் மங்கள வாழ்த்து. இயேசு பெருமான் மகிமையைக் குறவஞ்சி வாயிலாக வெளிப்படுத்தும் தமிழ்நூல் இதுவேயாகும். இக் குறவஞ்சி, திருக்குற்றாலக் குறவஞ்சி போன்ற இனிய நடையும் அழகிய பொருளும் கொண்டது.

வேதநாயகர் பாடிய அநேக பாடல்கள் கிறிஸ்தவ கீர்த்தனைகளாக இன்னும் பாடப்பட்டு வருகின்றன. இவை ஆழ்ந்த கிறிஸ்தவ கருத்துக்களைக் கொண்டவை. கிறிஸ்து பெருமானின் திருஅவதாரம் பாவிகளை மீட்பதற்காகவே; துஷ்டரை மீட்டு அவரைச் சிஷ்டராக்கும் தூய நோக்கம் கொண்டதே என்ற புனித கருத்தை வேதநாயகர் தமது பாடல்கள் மூலம் புகட்டினர்.

''எப்படியும் பாவிகளை ஒப்
புரவாக்கிக் கொள்வதற்கு
இப்புவியிலே உதித்தார்...''

என்றும்

''பொல்லா மனமுடைய
கல்லான பாவிகளை
கொல்லாதருள் புரியும் நல்
லாயன் யேசுபிரான்''

என்றும் பாடினர்.

— தொடரும்

---




மகாராஜா குழுக் கம்பனிகளின் மூல வளங்களையும் நிதி நிபுணர் குழு ஒன்றின் திறமையையும் பின்பலமாகக் கொண்டு மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் உங்கள் பணத்தைப் பாதுகாப்பாக முதலீடு செய்ய வாய்ப்பளிக்கிறது.

குறைந்த பட்சம் ரூ. 500/- அல்லது அதற்கும் அதிக முதலீட்டுடன் நீங்கள் ஆரம்பிக்கலாம். மாதாந்தம் அல்லது காலாண்டுக்கோ அரையாண்டுக்கோ ஆண்டுக்கோ ஒரு தடவையில் வட்டி கிடைக்கும். பணத்தை அவசரத்துக்கு இலகுவாக மீட்டுக் கொள்ளவும் வசதி அளிக்கிறோம்.

தனிநபராக அல்லது பலர் கூட்டாகச் சேர்ந்து நிலுவை முதலீடு செய்யலாம்

நீங்கள் பெறக்கூடிய உழைப்பின் உச்சம்-

36 மாதங்களுக்கு வருடாந்தம் 13%

24 மாதங்களுக்கு வருடாந்தம் 12%

12 மாதங்களுக்கு வருடாந்தம் 10%

வட்டியையும் திரும்ப முதலீடு செய்வது பற்றிப் பேசிக் கொள்ளலாம்.

மேற்கொண்டு தகவல் பெற, கூப்பனை நிரப்பி அனுப்புங்கள் தொலைபேசியிலோ, நேரிலோ தொடர்பு கொண்டாலும் மேலும் விபரம் தெரிவித்து, நிபந்தனையின்றி நிலுவை முதலீட்டுப் பத்திரங்களை வழங்குவோம்.

நிலுவை முதலீடுகள்
மகாராஜா
இன்வெஸ்ட்மென்ட்ஸ்
லிமிட்டெட்
த. பெ. எண். 319, கொழும்பு

அன்புடையீர்,

நான்/நாம் தங்கள் நிலுவை முதலீட்டுத் திட்டத்தில் முதலிட விரும்புகிறேன்/விரும்புகிறோம். தயவுசெய்து, நிபந்தனையின்றி மேலும் விபரங்களும் விண்ணப்பப் பத்திரங்களும் அனுப்பி வையுங்கள்:

முழுப்பெயர்/பெயர்கள்: ____________

விலாசம்: ____________

ஒப்பம்

மகாராஜா
இன்வெஸ்ட்மென்ட்ஸ்
லிமிட்டெட்

மகாராஜா குழுக் கம்பனிகளின் ஓர் உறுப்பு
54, பாங்ஷால் வீதி, கொழும்பு 11
தொலைபேசி: 23603-6

LAL - 3483

---

## அன்னை சாரதை

[அன்னை சாரதாவின் ஜனனதினம் இன்று. அதையொட்டி இப்பாடல் பிரசுரமாகின்றது.]

யுகயுகாந்திர காலம் முன்னைத் தவசிரேஷ்டர்கள்
பகலிரவாய் குகைகள்தோறும் இருந்து காத்த-அச்
சகலதவ யோகவாழ்வின் சாரமாய் வாழ்ந்தாள்!
அவள்
புகழ்பொற் பாத கமலம்நினைந்து
தொழுதல் பேரின்பம்!

மனிதகுலப் பெண்ணினத்தின் இன்ப சக்திகள்
இணைந்து உலகம் புனிதம்ஆகும் வண்ணம் சாரதா
மணியுருவில் வாழ்ந்த விதம்
அருளின் ஜீவிதம்! அந்த
மனித-தெய்வ வனிதை பாதம்
தொழுதல் பேரினபம்!

இராமகிருஷ்ண பரமஹம்ஸ முனிவர் சிவருட்
கரம்பிடித்து தவம்முடித்தாள்! அன்னை சாரதை
கறை துடைத்த முழுநிலாவின்
உளம் படைத்தவள்-அந்த
மறைகள் தொழும் இறைவிபாதம்
தொழுதல் பேரின்பம்!

வங்கம் தந்த நங்கை தங்க
நெஞ்சம் கொண்டவள்! -குளிர்த்
திங்கள்போல சீதளப்பே ரொளியைப்
பொழிந்தவள்!
மங்களமாய் எங்கும் என்றும் தங்கி
அருள்பவள்-அந்த
நங்கைபாதம் எங்கள்வேதம்! அதுவே பேரின்பம்!

—'வித்தகன்'

இதயம் கனியாகும்
110-வது வெற்றித் தினம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

RIO (Jaffna) Daily 10-30, 4-45 7-15 & 9.45
CARRY ON DICK
எல்லா நோய்களுக்கும் சிரிப்பு ஒரு அருமருந்து என்பர். சிரிப்பதற்கு வேண்டிய எல்லா அம்சங்களும் நிறைந்த படம். குடும்பத்துடன் பார்த்துச் சிரித்து மெய்மறந்து அனுபவியுங்கள்.

ராணி எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)
(ஜனத்திரள் அலைமோதுவதால் காட்சி நேரம் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகின்றோம்)

ஸ்ரீதர் ○ சிவாஜி ○ தேவிகா
(யாழ்ப்பாணம்) ○ ○ நாகேஷ்
தினசரி 4 காட்சிகள் நடித்த
அன்னை இல்லம்

REGAL (JAFFNA) Daily: 10-30 a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
2ND CROWDED WEEK
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

வெலிங்டன் ○ முத்துராமன் ○ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்
லிடோ போன்: 7693 விஜயகுமார்—லதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

## தேர்தல்கால—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட தலைவர்கள் எல்லாம் இன்று ஒன்று கூடி உரிமைக்குரல் எழுப்புவதைக் காண்கிறோம். இதேபோன்று எதிர் அணியில் நிற்பவர்கள் 'நாளை ஒரே அணியில் திரளக் கூடும். அரசியலில் எதையுமே நிச்சயமாகக் கூற முடியாது. எனவே எக் கட்சியானாலும் - எந்தத் தலைவரானாலும் எதிரணியிலிருப்பவர்களைத் தனிப்பட்ட முறையில் ஏளனம் செய்தும் இழிவுபடுத்தியும், குடும்ப விவகாரங்களை இழுத்தும் மேடைகளில் விமர்சிப்பதைக் கைவிடுவார்களாயின் - நல்லதோர் அரசியல் நாகரிகத்தை நம் நாட்டிலும் உருவாக்க முடியும்.

## கழுதையை—

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பற்றியும்' வெகுமதி பற்றியும் நீர் கேள்விப்பட்டு, என்னிடம் வந்து, வெகுமதித் தொகையான ஐம்பது ரூபாவைத் தரும்படி கேட்கிறீர். நான் தரவேண்டுமா? வேண்டியதில்லை? ஏன்? ஈழநாட்டில் வந்த விளம்பரம் பற்றி நீர் அறிந்திருக்கவில்லை. முன்னைவைப் பற்றி அறியாமல் ஏற்புச் செய்யமுடியாது. ஆகவே எனக்கும் உமக்கும் இடையே ஒப்பந்தம் எதுவும் ஏற்படவில்லை. எனவே வெகுமதி பெற, உமக்கு உரிமை இல்லை. வழக்கு வைத்தும் பயனில்லை. சட்டம் இதுதான்.

நாகம்மல்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்- மஞ்சுளா
புதுவெள்ளம்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-00
Sink or Swim

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
கனிமுத்து பாப்பா

# சிமெந்து பெறுவதில் யாழ். மக்கள் கஷ்டம்

அரியாலை, சனி

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தொடர்ந்து மேற்கொண்டுவரும் சட்டப்படி வேலைசெய்யும் திட்டத்தினால் யாழ்நகரில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு வாரங்களின் பின்னர் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கடந்தவியாழக்கிழமை பாவனையாளர்களுக்கான சிமெந்துப் பெர்மிட்டுகள் உதவி அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டன. பாவனையாளர்கள் மிகவும் நீண்ட நேரம் கியூவரிசையில் காத்து நின்று பெர்மிட்டுகளைப் பெற்றுச் சென்றனர். (அ)

## 73,000பேருக்கு உதவிகிடைத்தது

திருகோணமலை, சனி

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 73,000 பேருக்கு வரட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்பட்டிருக்கிறது. (உ)

## இலங்கை—

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் செய்தது. எம் ஜி ஆர் சரோஜாதேவி இலங்கைக்கு விஜயம் செய்த சில மாதங்களுக்குப்பின்னராகும். அதனால் எம் ஜி ஆர் சென்னைதிரும்பும் பொழுது திறந்த ஜீப் வண்டியில் விமான நிலையம் சென்றதைப்பற்றிகேள்விப்பட்டிருந்த எஸ் எஸ் ஆர் தனக்கும் ஒரு ஜீப்வண்டி ஒழுங்குசெய்யும்படியும்தானும் சென்னை திரும்பும் பொழுது ஜீப்வண்டியில்தான் விமானநிலையம் போகப்போவதாகவும் தெரிவித்துவிட்டார். அவர் விருப்பப்படி ஜீப்வண்டி ஒழுங்கு செய்யப்பட்டு ஜீப் வண்டியில்தான் எஸ் எஸ் ஆரும் விஜயகுமாரியும் விமான நிலையம் சென்றார்கள்.

சில வருடங்களுக்குப் பின் நான் சென்னை சென்றிருந்த பொழுது விஜயகுமாரியை ஸ்ரீதரின் படமொன்றில் நடித்துக் கொண்டிருக்கும்பொழுது சந்தித்தேன். அப்பொழுது எஸ் எஸ் ஆரும் விஜயகுமாரியும் பிரிந்து விட்டகதை அடிபட்டுக்கொண்டிருந்தது. நான் விசாரித்தேன். ஆனால் அவர் மறுத்துவிட்டார். பலர்பலதையும் கதைகட்டி விடுவார்கள். அதையெல்லாம் நம்பக்கூடாதென்ற முறையில் கதைத்து மழுப்பிவிட்டார். ஆனால் என்னவோ நல்லதோர் ஜோடி பிரிந்துவிட்டது

## பேரவையில்—

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யம் ஒன்றைச் சபையிலுள் வைத்துவிட்டு வெளியேறினார்.

—இந்த அம்ளிநுமனிகளில் அரசாங்கம் தந்தையின் பேச்சுக்கு அன்று பதிலளிக்கவில்லை, ''நாட்டில் மொழிப் பிரச்னை இருக்கிறது'' என்ற ஒரு வார்த்தை மட்டும் நிதி அமைச்சரிடமிருந்து வந்தது.

தன்னுடைய பேச்சுக்குப் பின்னர் என்னைக் கண்ட போது—

'நான் பேசும்போது நீர் இருந்தீரா?— என்னைக் கேட்டார் தந்தை.

'ஓம் சேர்'— நான் சொன்னேன்.

'நான் பேசியது துலாம்பரமாகக் கேட்டதா?'— அவர் கேட்டார்.

'ஓம் சேர், தெளிவாகக் கேட்டது'— நான் சொன்னேன்.

'சிலவேளைகளில் நான் பேசுவது தெளிவாகக் கேட்காது'— அவர் சொன்னார்.

'இது தெளிவாகக் கேட்டது; எல்லோரும் உங்கள் பேச்சைக் கவனமாகக் கேட்டார்கள்'— நான் சொன்னேன்.

'நானும் கவனித்தனன், நான் பேசும்போது ஜே. ஆர். எல்லோரும் 'இயர்போனை' எடுத்து நான் பேசுவதைக் கேட்டார்கள்' — தந்தை சொன்னார்.

—எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. இவற்றையெல்லாம் அவர் அவதானித்திருக்கிறாரே என்பதை நினைக்க.

'நான் பேசியது சரிதானே; நான் இரண்டு பிரதமர்களுடனும் ஒப்பந்தம் செய்திருக்கிறேன்; அப்படியிருக்க, டயஸ் பண்டாரநாயக்கா நான் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்று கூறுவது பிழை' என்று சொன்னார் தந்தை.

அவரது பேச்சில் அவர் கொண்டிருந்த நிதானத்தை உணர்ந்துகொள்ள முடிந்தது'

—மாலி

## அன்றுநான்—

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

தது. புகையிரத நிலையத்தில் இரவிரவாக காத்திருந்த பிரயாணிகள் ரயிலில் ஏறிக்கொண்டனர். ரயில் நிரம்பி வழிந்தது. மிதிபலகையிலும் பலர் நின்று கொண்டிருந்தனர் என்ஜினில் ஒரு பெரிய தமிழரசுக் கொடிகட்டப்பட்டது. புகையிரதம் புறப்படும் வரை 'சுந்தரர்' பிளாட் பாரத்தில் நின்று வழியனுப்பினார். பிரயாணிகள் சுந்தரரைவாழ்த்தினார்கள். அதன் பின்னரே அவர் அவ்விடத்தைவிட்டுச் சென்றார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றுகொண்டிருந்த மெயில் வண்டியில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. அந்த 3ம் வகுப்பு பெட்டியில் சில தமிழ்ப் பெண்களும், குழந்தைகளும் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். ஒரு வாலிப.கோஷ்டியினர் பெட்டிகளில் அடித்து பலமாக 'பைலா' போட்டு பாடிக்கொண்டிருந்தனர். போகப்போக அவர்களின் கும்மாளம் எல்லையைக் கடந்து விட்டது. அப் பெண்களுடன் வந்தவர்கள், அவ் வாலிபர்களை கொஞ்சம் மரியாதையாக நடக்குமாறு கூறினார்கள். அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. பின் புகையிரத நிலையத்தை மெயில் அடைந்ததும், அப் பெண்களுடன் வந்தவர்கள் புகையிரத நிலைய அதிபருக்கு புகார் செய்தனர். பிரயாணிகள் பலர் அங்குகூடிவிட்டார்கள். அரைமணி நேரமாக மெயில் நகரவே இல்லை. இச்சமயத்தில்தான் அடங்காத் தமிழர் சுந்தரர் இறங்கி அவ்விடத்திற்கு வந்தார். நடந்ததை விபரமாக அறிந்து கொண்டார். நேராக வாலிபர்கள் இருந்த அந்தப் பெட்டிக்குசென்று 'நீங்கள் பாட்டை நிறுத்தாவிடில் மெயில் இந்த இடத்தைவிட்டு நகராது' என ஆங்கிலத்தில் கூறிவிட்டு அவ்விடத்தில் நின்று அவர்கள் பதிலை எதிர்பார்த்தார். அவரைச் சுற்றி பிரயாணிகள் திரண்டு நின்றனர். ஒருமணி நேரமாகியும் ரயில் புறப்படவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக பாட்டின்வேகம் குறைந்து முற்றாக நின்றுவிட்டது. சுந்தரரும் ஏறி கவனியாவரை அந்தப் பெட்டியிலே இருந்து தமாஷாக கதைத்துக்கொண்டிருந்தார். அவ்வாலிபர்களும் அதற்குப்பின் தூங்கிவிட்டார்கள். அதன்பின் பேச்சுமூச்சே இல்லை. இப்படி ஒரு துணிச்சல் மிகுந்தவர் அவர்.

(தொடரும்)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்) விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)

''திருவருள்'' புரியும் பக்திரசமான 3-வது வாரம்
தினசரி 4 காட்சிகள் ஏ.வி.எம்.ராஜன் கிருபானந்தவாரியார்
ராஜா (யாழ்நகர்) நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின் திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)

யாழ்ப்பாணத்தில்

# 'ஹரே கிருஷ்ண' இயக்க இளந் துறவிகள்

இருவரும் இளைஞர்கள். காவியும், பூணூலும் தரித்துள்ளனர். ஒருவர் தலையை மறைத்து காவித்துண்டைப் போட்டுக்கொண்டிருந்தார். மற்றவர் பஞ்சகச்சமும், தலையில் உச்சிக் குடுமியும் வைத்துக்கொண்டு களையுடன் காணப்படுகிறார்.

இளமையும், தேஜஸும் பொருந்த இவ்விரு இளைஞர்களும் சில தினங்களுக்குமுன் 'ஈழநாடு' காரியாலயத்தைத் தேடிக்கொண்டுவந்தனர். ஒருவர் இலங்கையர்- அவரது பெயர் மகாகார்த்ததாஸ், இருபது வயது மதிக்கலாம். நெற்றியில் சந்தனத்தால் நாமம் தரித்துள்ளார். பூர்வாசிரமத்தில் அளுவிலைச் சேர்ந்தவராம். ஜெர்மனிக்குப் படிக்கச்சென்றவிடத்தில் 'ஹரிகிருஷ்ண' இயக்கத்தினால் கவரப்பட்டு அதில் சேர்ந்து கொண்டாராம்.

மற்றையஇளைஞர்-பாயஹரிதாஸ்- வயது 21. அமெரிக்கர். கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டபின் இந்த இயக்கம் பற்றி அறிந்து, பகவத் பிரசங்கங்களைக் கேட்டு, பகவத் கீதையை உணர்ந்து இதில் சேர்ந்துகொண்டாராம்.

இருவரும் தீட்சை பெற்றவர்கள். இவர்கள் மாத்திரமல்ல, மேலும் 12 பேர் இலங்கை வந்திருக்கிறார்கள். இவர்களின் யாழ்ப்பாண விஜயத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக இவ்விரு இளந்துறவிகளும் இப்போது யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்கள். பக்தி வேதாந்த சுவாமி பிரபு பாதா அவர்களைக் குருவாகக்கொண்ட இந்த கிருஷ்ண இயக்கத்தின் இலங்கை வந்துள்ள குழுவுக்கு ஹன்சதூத மகாராஜ் அவர்கள் தலைவராகவுள்ளார்.

புலால் உண்ணுமை, தேநீர், காப்பி உட்பட மதுவிலக்கல், சூதாடாமை, பிரம்மசரியத்தை முறையாகக் கடைப்பிடித்தல்- திருமணம் செய்வது விலக்கப்படவில்லை- ஆனால் பிரமச்சாரிகளாய் இருப்போர் அதனை முறையாகக் கடைப்பிடிப்பது போல் இல்லறத்தில் இருப்போரும் இதனை முறையாகக் கடைப்பிடித்தல் வேண்டும். இவை இவ்வியக்கத்திலிருப்போர் கண்டிப்பாகக் கடைபிடிக்கவேண்டிய கோட்பாடுகள். 108 மணிகளைக் கொண்ட துளசிமாலையை உருட்டியபடி பகவான் திருநாமங்களை தினமும் உச்சரித்து ஜபம் செய்வதும் முக்கிய கடமையாகும்.

எளிய வாழ்வு, கடவுள் உணர்வு, எங்கும் அமைதியும் சமாதானமும் நிலவவேண்டும் என்பது இவர்களின் குறிக்கோள்.

உலகம் முழுவதும் இந்த இயக்கத்துக்கு 125 கோவில்கள் இருக்கின்றனவாம். நாமசங்கீர்த்தனத்தின் மூலம் தெய்வீக உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த விழைகிறோம் என்கிறார் சுவாமி மகாகார்த்த தாஸ்.

இந்தஇயக்கத்துக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது என்று கேட்டேன்.

கைப்பெட்டியிலிருந்து சில நூல்களை வெளியில் எடுத்து ஹரிவைத்தார் சுவாமிமகாகார்த்த தாஸ். கண்ணைக் கவரும் வண்ண அட்டைகளுடன் விலை உயர்ந்த தாள்களில் அச்சடிக்கப்பட்ட பெரிய புத்தகங்கள் அவை. ஒவ்வொன்றும் இங்கு 50 ரூபாய்க்கு மேல் விலையாய் இருக்கும் என்று நினைக்கிறேன். பகவத்கீதை— பாகவதம் — இவைகளுக்கான விளக்கம் போன்றவை அந்நூல்கள். அதில் ஒன்று அமெரிக்காவில் 3,500 கல்லூரிகளில் பாடநூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்கிறார் சுவாமி பாயஹரி தாஸ் அவர்கள்.

இயக்கத்திற்கு இவ்வாறு தான் பணம் கிடைக்கிறதாம்.

யாழ்ப்பாணத்தில் எல்லாக் கோயில்களுக்குமே சென்று நாம சங்கீர்த்தனங்கள் நடத்த இவர்கள் எண்ணியிருந்தாலும் எதிர்வரும் 27ம் திகதி வண்ணை வரதராஜப் பெருமாள் கோவிலில் இவர்களின் நாம சங்கீர்த்தன நிகழ்ச்சி இடம்பெறும். இதனைப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் அவர்கள் ஏற்பாடுசெய்துள்ளார். 28-ம் திகதி பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் கோவிலில் நிகழ்ச்சி இடம்பெறும். சுமார் 3 வாரகாலம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கப்போகும் இந்தத் துறவிகள் கோஷ்டி நல்லூரில் தங்கியிருக்கும்.

— பேரு.

# கொழும்பில் இன்று

## குடியரசுவிழா ஏற்பாடுகள்

கொழும்பு, ஞாயிறு

ஸ்ரீலங்கா பௌத்தக் குடியரசின் ஐந்தாவது குடியரசு தின வைபவத்தை இன்று ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா ஆரம்பித்துவைப்பார்.

காலை நிகழ்ச்சிகளாக சமயச் சடங்குகள் நான்கு மதத்தவர்களாலும் நடத்தப்படும். காலையில் விஜயராமமாவத்தையிலுள்ள விபசன, பாவனா மத்தியஸ்தானத்தில் பௌத்த சமயச்சடங்குகளும், கொட்டாஞ்சேனை சென் லூசியஸ் தேவாலயத்தில் கிறிஸ்தவர்களின் ஆராதனையும், கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வரர் கோவிலில் இந்துக்களின் வழிபாடும், கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளிவாசலில் முஸ்லிம்களின் தொழுகையும் இடம்பெறும். இச்சமய நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி, பிரதமர், தபால் தந்தித் தொடர்பு அமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

காலிமுகத்திடலில் நடைபெறும் அணிவகுப்பில் 30 பாடசாலைகளைச் சேர்ந்த 2000 மாணவர்களும் கடேற்படையைச் சேர்ந்த 1000 கடேற் படையினரும் கலந்து கொள்வர். நண்பகல் 12.43-க்கு குடியரசுக்கொண்டாட்டத்தைக் குறிக்கும்வகையில் 25 வேட்டுக்கள் தீர்க்கப்படும். 19-56-க்கு பிரதமரது செய்தி வானொலியில் ஒலிபரப்பப்படும்' 1-30 க்கு ஜனாதிபதி உரைநிகழ்த்துவார்.

காலை 8-15 க்கு திரு. ரி. பி. இலங்கரத்தினவை முப்படைத் தலைவர்களும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாளரும் வெளிவிவகார பாதுகாப்பு அமைச்சு அலுவலகச் செயலாளரும் கொழும்பு அரசாங்க அதிபரும் வரவேற்பார்கள். பொலிஸ் மா அதிபரும் இவ்வரவேற்பில் கலந்துகொள்வார். 8-27-க்கு வருகைதரும் பிரதமரை திரு. இலங்கரத்தின வரவேற்பார்.

8-21-க்கு 21 மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்படும். அதன் பின்னர் படைக்களம் தாங்கும் படையினரின் மரியாதை அணிவகுப்பும் முப்படைகளின் அணிவகுப்பும் விமானப்படையினரின் சாகஸங்களும் இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு கொழும்பு நகரமண்டபத்தில் கலாச்சார நிகழ்ச்சிகள் இடம்பெறும். சகல போக்குவரத்தையும் பொலிசார் கண்காணித்துவருகிறார்கள். (ம-கா)

# யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், சனி

இலங்கையின் 5-வது குடியரசு தினக் கொண்டாட்டங்கள் இன்று காலை யாழ். அரசாங்க செயலகத்திலும், மாலை நிகழ்ச்சிகள் யாழ். திறந்த வெளியரங்கிலும்நடைபெறும்.

செயலகத்தில் தேசியக் கொடியை அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ. எல். விஜயபாலாஏற்றிவைப்பார். தேசிய கீதத்தைத் தமிழில், நல்லூர் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தினரும், சிங்கள மொழியில் சிங்கள மகாவித்தியாலய மாணவர்களும் பாடுவார்கள். இதனைத்தொடர்ந்து அரசாங்க அதிபரும் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. க. சிவநாதனும் உரையாற்றுவார்கள். திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலை மாணவிகளும், சுண்டுக்குளி மகளிர் வித்தியாலய மாணவிகளும் பாண்ட் வாத்திய இசையை வழங்குவார்கள்.

மாலை நடைபெறும் நிகழ்ச்சிகளில், பாடசாலை மாணவ, மாணவிகளின் நடன, இசை நிகழ்ச்சிகளும், நாதஸ்வரக் கச்சேரிகளும் இடம்பெறும். (கெ-இ)

# மூதறிஞர்இல்லத்தில் 'அமிர்' 'அமிரின்' இல்லத்தில் 'திரு'

யாழ்ப்பாணம். ஞாயிறு

தொகுதி உடன்பாட்டில் மாறிக்கொண்ட கூட்டணி செயலதிபர்திரு. அ. அமிர்தலிங்கமும், விடுதலைக் கூட்டணி பொருளாளர் திரு. திருநாவுக்கரசுவும் தமது இருப்பிடங்களை மாற்றிக்கொண்டுள்ளார்கள். தந்தை செல்வாவின் இல்லத்துக்கு திரு. அமிர்தலிங்கமும், திரு. அமிர்தலிங்கத்தின் வீட்டுக்கு திரு. நா. திருநாவுக்கரசுவும் மாறிக்கொண்டனர்.

இருவரும் தமது தேர்தல் பிரசாரத்தை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர். (கெ)

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

மூதறிஞர் செல்வா இரங்கல் கூட்டமும் 'தந்தை செல்வா' என்ற நூல் வெளியீடும் இன்று யாழ்.சட்ட நிலையத்தில் நடைபெறுகின்றது.

மாலை 4 மணியளவில் நடைபெறும் இவ் வைபவத்திற்கு திரு. அ. அமிர்தலிங்கம்தலைமை வகிப்பார்.

இக் கூட்டத்தில் திரு. மா. குலேந்திரனால் எழுதப்பட்ட 'தந்தை செல்வா' என்ற நூல் வெளியிடப்படும். முதற் பிரதியை எஸ். ரி ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. எஸ். தியாகராஜா பெற்றுக் கொள்வார். (கா-அ

ஃ ஃ ஃ

மாவிட்டபுரம் அருள்மிகு மகாமாரியம்மன் கோவிலில் இன்று மாலை இலட்சார்ச்சனை ஆரம்பமாகி 12 தினங்கள் தொடர்ந்து நடைபெறும். தினமும் நவசக்தி அர்ச்சனைகளாக இலட்சார்ச்சனை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## சுயாட்சி—

(1-பக்கத் தொடர்ச்சி)

றும் அவர் கூறினார்.

மற்றும் தொகுதிகளுக்கான அபேட்சகர் பற்றி இவ்வார இறுதியில் முடிவு செய்யப்படும் என்றும் அவர். தெரிவித்தார். (க)

## புதிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் திரு. வ. நவரத்தினம் தமிழ் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. ரி. யோகேந்திரா, தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு இது தொடர்பாக திரு. சி. சுந்தரலிங்கம் கடிதங்கள் அனுப்பியுள்ளார்.

இம் மாதம் 23ம் தேதிபுதிய கூட்டணி அமைப்பது பற்றி தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் இவர்களைக் கேட்டுள்ளார்.

இவர்களுடைய விருப்பத்தை அறிந்தபின்னரே தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பிக்க இருப்பதாகவும் அவர் கூறினார். (க)

## புனித—

(1-ம பக்கத் தொடர்ச்சி)

முறையில் இறுதிக்கிரியைகள் ஆரம்பமாயின, வண. ஆயர் அம்பலவாணரும் திரு. சந்திரகாசனும் வெள்ளிக்கலசத்தை மண்ணிற்குள் இறக்கினர். இவ்வேளையில் கிறிஸ்தவ கீதங்கள் இசைக்கப்பட்டன. இச்சமயம் பொதுமக்கள் கைகளில் மணலை அள்ளி அஸ்தியை வணங்கியவாறு அதன் மேல் தூவினர்.

இவ்வைபவத்திற்கு கனடாவிலிருந்து வந்த தந்தை செல்வாவின் புதல்வர் உட்பட மூன்று புதல்வர்களும் புதல்வியும் திருமதி செல்வநாயகமும் சமுகமளித்தனர்.

### நல்லூர் இளைஞர் ஊர்வலம்

இவ்வைபவ ஆரம்பத்தில் நல்லூர் தமிழ் இளைஞர் பேரவையினர் தந்தைசெல்வாவின் திருவுருவப்படத்தை தாங்கிய, உதயசூரியன் கொடி கட்டப்பட்ட டாக்சி முன்னே செல்ல ஊர்வலமாகவந்தனர். படத்தின் அடியில் ''நம்தேச பிதா'' என எழுதப்பட்டிருந்தது.

அஸ்தி புதைக்கப்பட்ட இடம் உடனடியாக மூடிக்கட்டப்பட்டது. இதன் மேல் தந்தை செல்வாவின் மூத்த புதல்வர் திரு. சந்திரகாசன் செந்நிற ரோஜா மலர்களை வைத்து அஞ்சலி செய்தார். (இ-க-கி)

# கிளிநொச்சி ஆசிரியர்கள் சங்கரியை ஆதரிக்கமுடிவு

கிளிநொச்சி, சனி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கிளிநொச்சிக் கல்விவட்டாரத்தைச் சேர்ந்த தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் கிளிநொச்சித் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வி ஆனந்தசங்கரியை ஆதரிப்பதென்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இலங்கைத் தமிழாசிரியர் சங்க உபசெயலாளர் திரு. என். சோதிநாதன் தலைமையில் கிளிநொச்சித் தமிழாசிரியர்கள் நேற்றுக்கூடி இவ்வாறு முடிவுசெய்தனர். கிளிநொச்சித் தொகுதியில் மொத்தம் 90 பாடசாலைகள் இருக்கின்றன.

திரு. ஆனந்தசங்கரி ஒரு முன்னாள் ஆசிரியரென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## கொடும்பாவி கொளுத்தினர்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை யிட்டு சிமெந்துக் கூட்டுத்தாபன நிர்வாகம் அசிரத்தையாக இருந்து வருவதை ஆட்சேபித்து நேற்றுக் கொடும்பாவி ஊர்வலமொன்றை நடத்தி தொழிற்சாலை முன்றலில் வைத்து அக்கொடும்பாவியைக் கொளுத்தினார்கள்.

வட்டக்கச்சியில்

## மறைந்த தலைவர்களுக்கு அஞ்சலி

கிளிநொச்சி, சனி

மறைந்த தமிழ்த் தலைவர்களான மு. திருச்செல்வம், ஜி.ஜி. பொன்னம்பலம், மூதறிஞர் செல்வநாயகம் ஆகியோருக்கு இம்மாதம் 25ம் திகதி மாலை 4 மணியளவில் வட்டக்கச்சியில் அஞ்சலி செலுத்தப்படவிருக்கிறது.

வட்டக்கச்சி சந்தை மைதானத்தில் நடைபெறும் இவ்வஞ்சலிக் கூட்டத்திற்கு திரு. வி. ஆனந்தசங்கரி தலைமை வகிப்பார். (அ)

## கட்டுக்காசுகட்ட தீர்மானம்

பரந்தன், சனி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பரந்தன் கிளையும் பரந்தன் இளைஞர் பேரவையும் இன்றுகூடி கிளிநொச்சித் தொகுதிக் கூட்டணி வேட்பாளர் திரு. வி. ஆனந்தசங்கரியின் தேர்தல் கட்டுப்பணத்தைத் தாமே கட்டுவதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். அத்துடன் தேர்தல் செலவின் ஒரு பகுதியைத் தாம் பொறுப்பேற்பதென்றும் தீர்மானித்தனர்.

இக் கூட்டம் திரு. த. சு. ஞானப்பிரகாசம் தலைமையில் குமுழமுனையில்நடைபெற்றது. (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மேமாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Teleg[illegible] Eelanaadu Telephone 389, Registered as a Newspap[illegible] Sri Lanka